www.eelamview.com













# விடுதலைப்புலிகள்




குரல்: 137 | ஆவணி-புரட்டாதி. 2007 | அன்பளிப்பு: 12/=

## சிங்களப் படைகள் ஆரம்பித்துள்ள
# வன்னி மீதான பெரும் போர்

**வன்னி நிலப்பரப்பு மீது பெருமெடுப்பில் சமரொன்றைத் தொடுத்து அதை ஆக்கிரமிக்கவேண்டும் என்பது மகிந்த அரசின் கனவாக உள்ளது. இந்தச் சமருக்கு ஜே.வி.பி மற்றும் கெலஉறுமய போன்ற அதிதீவிர இன வாதக் கட்சிகள் மட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவளிப்பதாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளது.**

இப்போது வன்னி ஆக்கிரமிப்பு சிங்களக் கட்சிகளின் பொதுக்கனவாகிவிட்டது. சிங்கள மக்களும் அத்தகையதொரு ஆக்கிரமிப்புப் போருக்கு ஆதரவளித்துள்ளனர். சமாதான விரும்பிகளாகக் காட்டிக்கொண்ட சிங்களப் புத்திஜீவிகளும் வன்னி மீதான படையெடுப்பிற்கு ஆதரவு தெரிவித்து சிங்கள ஊடகங்களில் கருத்துரைகள் எழுதி வருகின்றனர்.

வன்னி மீதான படையெடுப்பு முயற்சிகளுக்கு சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சில நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றன பெருமெடுப்பில் மனித அவலம் நிகழும் என்ற எதிர்பார்ப்பில் அத்தகைய படையெடுப்பை அவை எதிர்க்கின்றன.

ஆயினும், மகிந்த அரசு வன்னிமீதான சமரை நடாத்த விரும்புகின்றது. சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச வன்னி மீதான படையெடுப்புப் பற்றி அடிக்கடி கருத்து வெளியிட்டுவருகின்றார்.

இதே கருத்தைச் சிங்களத்தின் சனாதிபதியும் - பாதுகாப்பு அமைச்சரும் - முப்படைத் தளபதியுமாகப் பொறுப்பு வகிக்கும் மகிந்த ராஜபக்சவும் வெளியிட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தைக் கைப்பற்றியே தீருவோம் என்று அவர் அண்மையில் பகிரங்கமாகக் கருத்துவெளியிட்டுள்ளார்.

கருத்துக்கள் - சூழுரைகளுக்கு அப்பால் இப்போது சிங்கள அரசு வன்னிமீது தனது படையெடுப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டது. மன்னார் களமுனையில் - முகமாலைச் சமரரங்கில் சிங்களப் படைகள் களங்களைத் திறந்துள்ளன.

மாந்தைமேற்கு உதவி அரச அதிபர் பிரிவில் மக்கள் இப்போது வசிக்கமுடியாத அளவிற்குக் கடுமையான எறிகணை மற்றும் வான் தாக்குதல்களைச் சிங்களம் அங்கே நடாத்திவருகின்றது. பல்லாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து அல்லற்படுகின்றனர்.

முகமாலைச் சமரரங்கிலும் கடந்த இரண்டு மூன்று நாட்களாகப் பெருந்தாக்குதலைப் படையினர் தொடுத்துள்ளனர். கிளாலி - நாகர்கோவில் களமுனை

(02ஆம் பக்கம் பார்க்க)




தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# தனிமைப் படுத்தப்படும் சிங்கள அரசு

சிங்கள அரசின் சுயரூபம் உலக அரங்கில் அம்பலமாகத் தொடங்கியுள்ளது. தமிழர் மீதான அதன் இனவெறிப்போக்கும் வெளிநாடுகள் தொடர்பான அதன் வெறுப்புணர்வும் இன்று உறுதிப்படுத்தப்பட்ட உண்மைகளாகிவிட்டன.

அரசியல் உரிமை கோரி குரலெழுப்பிய தமிழினத்திற்கெதிராக கடந்த 30 வருடகாலமாகச் சிங்கள அரசு ஒரு இன அழிப்புப் போரை நடாத்திவருகின்றது. அநீதியான அந்தப்போருக்காக மாறிமாறி ஆட்சி பீடமேறிய சிங்களத் தலைவர்கள் பல்லாயிரம்கோடி ரூபாய்களைச் செலவிட்டுவருகின்றன.

அபிவிருத்தி – உதவி என்ற மனிதாபிமான எண்ணங்களுடன் வெளிநாட்டு அரசுகள் சிங்கள தேசத்திற்கு வழங்கிய நிதியுதவிகளை அது போருக்குச் செலவிட்டு அழிவுகளை அறுவடை செய்துவருகின்றது.

சிங்கள அரசின் இந்தப் போர்வெறிக் குணாம்சத்தை இல்லாதொழிக்க உலகநாடுகள், பலவழிகளிலும் முயன்றன. ஆலோசனைகள் கூறி – அழுத்தங்கள் கொடுத்து – எச்சரிக்கைகளும் செய்து பார்த்துத் தோல்விகண்டன. இப்போது மட்டுப்படுத்தப் பட்ட அளவில் செயலிலும் சில நாடுகள் இறங்கி யுள்ளன.

சிங்கள அரசின் போர்வெறிக்குத் தீனிபோடும் பொருண்மிய – இராணுவ உதவிகளைச் சிறிலங்காவிற்கு வழங்குவதில்லை என்று சில ஐரோப்பிய நாடுகள் தீர்மானித்துள்ளன.

‘சிறிலங்காவிற்கான இராணுவ உதவிகள் நீடிக்கப்படக்கூடாது’ என்று அமெரிக்க செனற்சபையும் தீர்மானம் இயற்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் பணிசெய்யமுடியாத ஆபத்தான நாடுகளின் வரிசையில் சூடானுக்கு அடுத்ததாகச் சிறிலங்கா உள்ளது என்று ஐ.நா மனித உரிமைகள் விவகாரத்திற்கான பிரதிச்செயலர் அண்மையில் கொழும்பில் வைத்துக்கூறியிருந்தார்.

கொலைகளும் – ஆட்கடத்தல்களும் – காணமற்போதல்களும் அரச ஆதரவுடன் இலங்கைத் தீவில் நடைபெற்று வருகின்றன என்று உலக மனித உரிமை அமைப்புகள் சிங்கள அரசைக் கண்டித்து வருகின்றன.

உண்மைகளை அம்பலப்படுத்துகின்ற இந்தச் சர்வதேசக் கண்டனங்களால் ஆத்திரமடைந்த அமைச்சர்களும் – அரச தலைவர்களும் சர்வதேச சமூகத்தை அவமானப்படுத்தும் வகையில் வார்த்தைச் சேறுகளை அள்ளிவீசியும் வருகின்றனர்.

இதன் விளைவாகச் சிறிலங்கா அரசிற்கும் சர்வதேச நாடுகள் சிலவற்றிற்குமான உறவு நிகைளிலும் விரிசல்கள் ஏற்பட்டுவருகின்றன.

தமிழரின் இனப்பிரச்சினையை அமைதிவழியில் அரசியல் தீர்வு மூலம் சிங்கள அரசு வழங்கவேண்டும் என்று உலக நாடுகள் கோரி வருகின்றன. புலிகள் இயக்கத்துடன் பேசி ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும் என்றும் அவை ஆலோசனைகள் கூறிவருகின்றன.

எனினும் சர்வதேசத்தின் குரலுக்குச் சிங்கள அரசு மதிப்பளிப்பதாக இல்லை. தொடர்ந்தும் தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை வழங்குவதிலேயே அது ஆர்வமாக உள்ளது. இப்போது வன்னி மீது ஒரு பெரும் படையெடுப்பிற்குச் சிங்கள அரசு ஆயத்தமாகி வருகின்றது. கிழக்கில் ஏற்படுத்திய மனித அவலத்தைவிட பன்மடங்கு அழிவுகளை வன்னியில் ஏற்படுத்தச் சிங்களப்படைத்தலைமை திட்டமிட்டுள்ளது. சிங்களத்தின் போர்வெறிக்கு ஆதாரமான பொருளாதாரம் சிறிலங்காவில் இல்லை என்பதே உண்மை. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சர்வதேச நாடுகள் வழங்கிவரும் மனிதாபிமான உதவிகளின் பெரும் பகுதியைப் போருக்குத் திருப்பிவிட்டுள்ளது என்பதே உண்மையாகும். இந்த பேருண்மையை இப்போது உலக நாடுகளும் உணர்ந்துகொண்டுள்ளன என்பது தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளன.

சிங்கள அரசிற்கான நிதி உதவி முடக்கம் மற்றும் இராணுவ உபகரணங்களை வழங்குதலை நிறுத்தல் போன்ற செயல்ரீதியிலான அணுகுமுறையே சிங்கள அரசின் போர்வெறிக்கு எல்லை போடக்கூடிய அணுகுமுறையாக இருக்கும். அத்துடன், அரசியல் ரீதியாக உலக நாடுகளிடமிருந்து சிங்கள அரசு தனிமைப்படுத்தப்படும் போதுதான் அமைதி வழித்தீர்வு பற்றிச் சிந்திக்க சிங்கள அரசு நிர்ப்பந்திக்கப்படும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை அமைதி வழியில் அரசியல்தீர்வு மூலம் தீர்க்கப்படுவதையே புலிகள் இயக்கம் விரும்புகின்றது.

ஆனால் பேச்சுவார்த்தை என்பதையும் தீர்வுத்திட்டம் என்பதையும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஒரு அரசியல் நாடகமாகவே, இதுவரை சிங்கள அரசு நடாத்திவருகின்றது. அதனால்தான் வேறு வழிகளின்றி புலிகள் இயக்கம் ஆயுதப்போரை நடாத்துகின்றது.

தமிழர் மீது சிங்கள அரசு நடாத்திவரும் ஆக்கிரமிப்புப் போருக்கு மனிதாபிமானத்துக்கான போர் என்று புது வியாக்கியானமொன்றையும் மகிந்த அரசு கொடுக்கமுனைகின்றது.

சிங்களத்தின் இராணுவ நிர்வாகத்திற்குள் சிக்கி அவலப்படும் தமிழ் மக்களைக் கொச்சைப்படுத்தும் விதமாகவே அந்த வியாக்கியானம் அமைந்துள்ளது. சிங்களப் படைகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள நிலங்களில் வாழும் தமிழ் மக்கள் படுகின்ற மனித அவலங்களைக் கண்டித்து அதற்குக் காரணமான சிங்கள அரசிற்கெதிராக உலக நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளையும் ‘மனிதாபிமானப் போர்’ என்ற சிங்களத்தின் விளக்கம் கொச்சைப்படுத்துகின்றது.

‘சமாதானத்திற்கான போர்’ ‘மனிதாபிமானத்திற்கான போர்’ ‘இறைமைக்கான போர்...’ என்று சொற்சிலம்பமாடி தமிழரை வதைக்கும் சிங்கள அரசின் இனவெறிச் செயற்பாட்டை உலக சமூகம் புரிந்துகொண்டு, சிங்கள அரசிற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது தான் தமிழ் மக்களின் வேண்டுகோளாகும்.

புலிகளின் குரல்

---

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் சிங்களப் படைகள் முன்னேற்ற முயற்சிகளையும் செய்து பார்க்கின்றன. இந்த முன்னேற்ற முயற்சிகள் எல்லாவற்றையும் புலி வீரர்கள் முறியடித்துப் படையினரை முடக்கிவருகின்றனர்.

வன்னி வாழ் மக்கள் மீது சாவையும் – இடப்பெயர்வு அவலங்களையும் சுமத்தி, கிழக்கு மாகாணச் சமர்களைப்போல, நிலம் ஆக்கிரமிக்க சிங்களப்படைகள் ஆசைப்படுகின்றன.

வன்னியைச் சிங்களப் படைகள் ஆக்கிரமித்தால் பெரும் இனப்படுகொலை நடக்கும் என்பது சர்வதேச மனித உரிமை வாதிகளின் கருத்தாகவுள்ளது அதேவேளை வன்னி மக்களை ஒரு பெரும் போருக்குப் புலிகள் இயக்கம் தயாா்ப்படுத்தி வைத்திருப்பதால் சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பு ஆசை நிறைவேற வாய்ப்பில்லை என்றும் இராணுவ ஆய்வாளர்கள் கருத்துக்கூறிவருகின்றனர்.

ஒட்டுமொத்தத்தில் ஒரு பெரும் போர் வன்னி மண்ணில் நிகழப்போகின்றது என்று சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது.

எதிரி ஆசைப்படுவது போல வன்னிச் சமர் சிங்களப் படைகளுக்கு இலகுவானதாக இருக்கப்போவதில்லை. வன்னி மண்ணின் ஒவ்வொரு குடும்பமும் சமரில் நேரடியாகப் பங்கேற்கும் அளவிற்கு விடுதலைப்போராட்டம் விரிவடைந்துள்ளது. புலிகள் இயக்கத்தின் ஆட்பலமும் பெருகியுள்ளது. எதிரி தொடுத்த சிறுசிறு தாக்குதல்களையெல்லாம் முறியடித்த புலிவீரர்கள் உற்சாகத்துடனும் – ஓர்மத்துடனும் களமுனையில் காத்திருக்கின்றனர்.

வன்னி வாழ் மக்களும் இத்தகையதொரு உறுதியுடனும் ஓர்மத்துடனும் செயற்படவேண்டிய வரலாற்றுக் கட்டம் அண்மித்துக் கொண்டிருக்கின்றது.

“ஜெயசிக்குறு” சமரை மக்களின் முழு ஆதரவுடன் புலிகள் இயக்கம் முறியடித்து வெற்றிவாகை சூடியது இன்று பெருமைமிகு வரலாறாக எம் முன் உள்ளது. மீண்டும் அத்தகையதொரு இராணுவ சாதனைபடைத்து இனமானம் காக்க மக்களை வரலாறு அழைக்கின்றது.

மக்களின் விடுதலைப் பற்றும் – வன்னியின் புவியியற் சூழலும் சிங்களப் படைகளை அச்சமூட்டிக்கொண்டே இருக்கின்றன. அதனால் தான் கடந்த ஒருவருடகாலமாக வன்னி மீதான பெரும் சமரை எதிரி ஒத்திவைத்துக்கொண்டே வந்தான்.

சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள இடங்களில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை இன்று அவலம் நிறைந்ததாகவே உள்ளது. கொலைகளும் – காணாமல்போதல்களும் – சித்திரவதைகளும் அங்கே நாளாந்த நிகழ்வுகளாக உள்ளன. மனித உரிமைக் கழகங்களிடம் தஞ்சம் கோரும் தமிழரின் தொகை அங்கே பெருகிவருகின்றது.

இத்தகையதொரு அவலத்தை மக்கள் மீதும் கட்டவிழ்த்துவிட ஆசைப்படும் சிங்களப்படைகளின் எண்ணத்தை முறியடிக்கவேண்டிய பணி இன்று எம்முன் உள்ளது.

வன்னியில் புலிகள் புரியப்போகும் எதிர்ச்சமர் வன்னியைக் காக்கும் தற்காப்புப் போர் என்ற நிலைக்கும் அப்பால், வன்னியிலிருந்து நிலம் மீட்கும் போராக முழுப்பரிமாணம் பெறுவதற்குமக்களின் ஒத்துழைப்பும் – பங்களிப்பும் மிக அவசியமானதாகும்.



www.eelamview.com

www.eelamview.com



# "எடுத்துச் செல்லுங்கள் எங்கள் உபதேசமிதே"

**க.வே.பாலகுமாரன்**

வரலாறென்பது திரும்பத் திரும்ப நிகழும் ஒரு இயக்கம் என்பதால் எமது அரசியல் பற்றியும் பல வேளைகளில் மீட்டல்களாக அமைவதை வாசகர்கள் அவதானித்திருப்பர். எப்போதுமே எதையுமே தொடக்கத்தில் இருந்தே சொல்லவேண்டியிருப்பதே ஒருவகை வரலாற்று அவலம் என்பார்கள். இவ்வாசகத்தைக்கூட இப் பத்தியில் மீண்டும் எழுதவேண்டியுள்ளது. "நுனிக்கொம்பர் ஏறினார் அ்.்.து இறந்து ஊர்க்கின் உணர்க்கு இறுதியாகிவிடும்" இக்குறளைக்கூட சந்திரிக்கா + ரத்வத்தைக் குழுமம் ஆட்டம்போட்ட பொழுது 1998களில் தலைப்பாக இட்டோம். இப்போது அதே வார்த்தைக்கு மீளவும் உயிர் கொடுத்து அவரையும் இணைத்து "அவர் ஏறி விழுந்த அதே மரத்தின் நுனிக்கொம்பர்" ஏறும் இராசபக்ச சோதரர் பற்றி எழுதவும் அதே குறளே மிகப் பொருத்தமாகின்றது. புதிய வரலாற்றினைப் படைக்கப்போவதாகக் கூறிக்கொள்வோரே பழைய வரலாற்றின் மிகத் தெளிந்த பக்குவமான பாடங்களைக் கற்க மறுக்கையில்/ மறக்கையில் யார்தான் என்னசொல்லக் கூடும். அப்படியாயின் என்ன வேறுபாடு அன்றைக்கும் இன்றைக்கும் என யாரும் வினாவலாம். அப்போது (சந்திரிகா காலம்) போர்ச்செலவு 5 பில்லியனுக்கும் 10 பில்லியனுக்கும் இடைப்பட்டதாக ஏறியது. இப்பொழுது 10 - 20 பில்லியனுக்கு இடைப்பட்டதாக எகிறுகிறது. இதை இன்னொரு வகையில் கூறினால் 1980களில் சியாமாசெட்டி விமானம் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர். 2000ல் மிக் 27 இருபது மில்லியன் டொலர். இப்போதோ 20 - 25 மில்லியன் டொலரில் மிக் 29 கொள்வனவு பற்றிப் பேசப்படுகின்றது. **இது மலையைக் கொல்ல எலியைப் பிடிக்கும் கதைதான். இது காலம் சொல்லும் கதையல்லவா.**

ஆயினும் அல்லது இருந்த பொழுதும் உண்மைகள் உறங்குவதில்லை. **எமது சூரியனுக்கு கீழே உள்ளவற்றில் மிகக் குழப்பமானதும் புரிந்துகொள்ள முடியாததும் அவரவருக்கு உண்மைதான்** என முதுமொழி இருந்தாலும், உண்மைகள் வெளிவந்தவண்ணமே உள்ளன. நல்லறிவை நல்வழியை யாராவது சொல்லிய வண்ணமே உள்ளார்கள். மகிந்தரின் போக்கின் அதி அபாயத்தையும் நாசகார அரசியலையும் உச்ச மடமையைப் போர்வெறியின் மிகு விபரீதத்தை பொருண்மியம் தாழ்ந்துபோகும் கெடுநிலையையும் யாராவது சொல்லிக்கொண்டேயிருக் கிறார்கள். "இரத்தவெறி" என்கிற பயங்கரத் தலைப்பில் 29.08.2007 தினக்குரல் தலையங்கத்தில் கூறிய கருத்துக்கள் முத்தாய்பானவை. **"போர் இன்று சமுதாயத்தைக் குரூரமயப்படுத்திவிட்டுள்ளது. படுகொலைகள் குறித்து மக்கள் உணர்ச்சியற்றவர்களாகிப் போயுள்ளனர். பழிவாங்கும் மனோபாவம் வேகமாக அதிகரிக்கின்றது. எந்தத் திசையில் திரும்பினாலும் இரத்தவெறிகொண்டு சமுதாயம் அலைவதையே காணமுடிகின்றது. மக்களின் உணர்வுகள் செத்துப்போய்விட்டன"** 16.08.2007 அன்று அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறியதைப் பாருங்கள். "சருவகட்சி ஆலோசனைக்குழுவால் இணக்கப்பாடு எட்டமுடியாத நிலை தோன்றியுள்ளது. வரலாற்றினைப் பார்க்கும் பொழுது தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தென்னிலங்கையில் உள்ள கட்சிகள் தீர்வுகான முன்வராது என்று விடுதலைப்புலிகள் கூறிவருகின்றனர். இலங்கை அரசோடு கையொப்பம் இடுவதில் பயனில்லை. ஆட்சியில் இருக்கும் கட்சி எதிர்க்கட்சியாகும்போது அந்தக் கையொப்பம் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்ற புலிகளின் குற்றச்சாட்டு அர்த்தப்படுத்தப்பட்டு விடுதலைப்புலிகளின் பிரிவினைக்கோட்பாடு மேலோங்கிவிட விடக்கூடாது. தென்னிலங்கைக் கட்சிகளிடையே **இனச்சிக்கலைத் தீர்க்க இணக்கப்பாடொன்றில்லை என விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்தோடு தர்க்கிக்கின்றனர். இந்த தர்க்கம் உண்மையாகிவிடக்கூடாது"** (வீரகேசரி 17.08.2007) இக்கூற்றை சாதாரணதொரு கூற்றாக நாம் கணிக்கமுடியாது. வரலாற்றின் ஒப்புதல் வாக்குமூலம். இவ்வாறு அவர் கூறிய பின்னரும் சருவகட்சிக் குழுக்கூட்டம் பின்போடப்பட்டும், பிரதமர் தலைமையில் இயங்க பணிப்பு விடப்பட்டும், வரவு செலவுத்திட்டத்தின் பின்னே தீர்வுத்திட்டம் பற்றிப் பார்த்துக்கொள்ளப்படும் என அறியப்பட்டுள்ளது. அதற்கிடையில் எவ்வளவு மாறாட்டங்கள், பொய்மைக் கதைகள் கட்டிவிடப்படும் என்பதை எவரும் அறியார். ஆனால் சாதாரண சிங்கள மக்களை முற்றிலுமாக இலக்குவைத்து அவர்களைப் பேரினவாதத் தாலாட்டாலேயே தொடர் உறக்க நிலையிலே வைத்திருப்பது குறித்து இப்போது சிங்கள சமூகத்திடையே விவாதம் தொடங்குகிறது. சிலராவது மனம் பொறுக்காமல் உண்மை நிலையை உணர்த்தத்தொடங்கியிருக்கிறார்கள். அவற்றினைப் பதிவு செய்வதே எம் நோக்கம்.

தொடர்ந்து பேரினவாத மயக்க மருந்து சிங்களவர்களுக்கு ஊட்டப்படுவது, போர்வெறிகொண்டு அலைவது, புலிப்பூச்சாண்டி காட்டுவது, தேசப்பற்றாளர் போல் கர்ச்சிப்பது, ஒற்றையாட்சியெனக் கொக்கரிப்பது எல்லாமே எதற்காக? இதற்காகத்தான் என விடை சிங்களத் தரப்பாலே முன்வைக்கப்படுகின்றது. எனவே இக்கட்டத்திலாவது சிங்கள மக்கள் உண்மையை உணர்வார்களா? விடை காலத்தாயின் கையில். இன்று சிங்களத்தின் தலைவிரித்தாடும் ஊழலின் உச்ச அளவை ஆளும் தரப்பாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை.

> **கழிவிரக்கம் கொண்ட கட்டுரைகளும், கடிதங்களும், தலையங்கங்களும் சிங்களத்தில் இப்போது வெளிவரத்தொடங்குகின்றன. உள் முரண்பாடுகளாலும் அரசியல் சதிகளாலும் சிங்களம் கொதித்த வண்ணமே உள்ளது. வரலாற்றின் சுருக்குச் சிங்கள தேசத்தின் கழுத்தை மேலும் மேலும் இறுக்குகின்றது. இவை பற்றி ஏதும் கவலைப்படாது. மகிந்தர் தனது குடும்ப ஆட்சியைப் புதிதாக நிலைநாட்டத் தேர்ந்தெடுத்த காலம் அகாலம்.**



கோப் (cope) எனப்படும் அரச நிறுவனங்களைக் கண்காணிக்கும் நாடாளுமன்றக் குழுவின் தவிசாளரும், சனாதிபதி சட்டத்தரணியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்பியுமான விஜயதாச ராஜபக்ச அண்மையில் 20 அரசாங்க நிறுவனங்களில் 600 கோடி வரையிலான ஊழல்கள், மோசடிகள் பற்றி அறிக்கையை வெளியிட்டு பூகம்பத்தையே உருவாக்கினார். சனவரி 12இல் 26 அரச நிறுவனங்களின் பலகோடி ஊழல் பற்றி நாடாளுமன்றில் அறிவித்திருந்தார். அரசன் எவ்வழி குடிமக்கள் அவ்வழி என்றாகிவிட்டது.

அண்மையில் கொழும்பில் முக்கிய கூட்டமொன்றில் குடிமக்கள் வேண்டுவது ஊழல் அற்ற அரசே என்ற தலைப்பில் மிக துணிகரமாக, நேர்மையாக அவர் உரையாற்றினார். தன்முன்னே கூடியிருந்தோரை நோக்கி அவர் கேள்வி எழுப்பினார். "நான் ஒரு அரசியல்வாதியாக இல்லாமல் ஒரு சாதாரண குடிமகனாகவே உங்கள் முன் பேசுகின்றேன். **நீங்களும் இவற்றுக்கெல்லாம் பொறுப்பாளிகள் தான். சனநாயகம் என்பது மக்கள் பங்கேற்பினையே குறிப்பது. அப்படியானால் உங்கள் பங்கேற்பின் விளைவென்ன. நான் சொல்வேன் ஒன்றுமே இல்லை."** இக்கூற்று உங்களைக் காயப்படுத்தக்கூடும். ஆனால் இதுதான் உண்மை. ஏதாவது என் கண்முன்னே மிகத் தவறாகச் சட்டவிரோதமாக நடக்கையில் அதைத் தட்டிக்கேட்கவோ நடவடிக்கை எடுக்கவோ முடியாவிட்டால் நான் இருந்து என்ன பயன். சட்ட அமைப்புக்கள் சில பாராமுகமாக நடப்பதைப் பார்க்கின்றோம். **எமது நாடு ஊழலின் உச்ச நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.** இதற்குக் காரணம் என்ன? **சட்டத்தின் ஆட்சி எனப்படும் சனநாயகப் பண்பை எமது மக்கள் பேணாமையே"**

தொடர்ந்து அவர் பேசியதாவது, மகியங்கணையைச் சேர்ந்த ஏழைத் தொழிலாளியான சைமன் நான்கு தேங்காயைத் திருடியமைக்குத் தண்டனை ஆறுமாதக் கடுங்காவல். ஆனால் பலகோடி ஊழலை எனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளேன். பெயர், பதவி நிலைகளெல்லாம் எனது அறிக்கையில் உள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)



www.eelamview.com

www.eelamview.com



# கனவு மெய்ப்பட வேண்டுமெனில்...



**சிறிலங்கா எடுத்துக் கொண்ட இந்த வழிமுறைக்கு மறுத்தானாக தமிழர் தேசமும் முன்னெப்போதும் இல்லாதவாறு மக்கள் மயப்பட்ட யுத்தத்திற்காக தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது. அப்போது யுத்தகளமாக இருந்த வன்னிப்பெருநிலப்பரப்பு போர்ச் சன்னதம்கொண்டு நின்றது. யுத்தம் விடுதலைப் புலிகளினுடையதாக இருக்கவில்லை. வன்னியின் ஒவ்வொரு ஜீவனினுடைய தாகவும் போர் உருமாறியிருந்தது.**

**17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மேற்குத் தேச அறிஞர் தோமஸ் கொப்ஸ் (Thomas hoppes) இனுடைய பிரபலமான மேற்கோள் ஒன்று உண்டு. “வாளில்லாமல் செய்யப்பட்ட ஒப்பந்தம் வெறும் வார்த்தையே. அது ஒரு போதும் ஒரு மனிதனைக் காக்கும் பலத்தைத் தக்க வைத்துக்கொள்ளாது.”**

2001ல் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட போது தமிழரின் வாள் மிகுந்த பலமுள்ளதாக இருந்தது. சிங்களத்தரப்பின் வாளோ முன்னெப்போதும் இல்லாதளவு கூர் மழுங்கி நிமிரத் தைரியம் அற்று இருந்தது. இந்தப் பின்னணியில் தான் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இவ் ஒப்பந்தம் விடுதலைப் போராட்டங்களுக்கு பாதகமாக இருந்த உலகப் புற நிலையின் மத்தியிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் ஒரு நடைமுறை அங்கீகாரத்தை வழங்கிற்று. இப்படியொரு தகமையான ஒப்பந்தம் உருவாக தமிழரின் வாள் கொண்டிருந்த பலம் முதன்மைக் காரணியென்பது மறுக்கப்பட முடியாதது.

முன்னெப்போதும் – ஐம்பது வருட இனமுரண்பாட்டு வரலாற்றில் – சமதரப்பு அங்கிகாரம் கொண்ட ஒப்பந்தம் ஒன்றை தமிழர் தரப்பு எட்டியிருக்கவில்லை. சிங்களத்தரப்பை இப்படிப் பணிய வைக்குமளவு தம் பலத்தை தமிழர் தரப்பு கண்டிருக்கவும் இல்லை.

இனமுரண்பாடு வன்முறை வடிவமடைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் காலத்திலிருந்து, டீ.பி.விஜயதுங்கவின் காலம் வரை சிறிலங்கா அரசு யுத்தத்தை இராணுவத்தோடு மட்டுப்படுத்தியிருந்தது. யுத்தத்தை சிங்கள மக்கள் மயப்படுத்த அது விரும்பியிருக்கவில்லை. குறிப்பாக 1983ன் பின் வடக்கு கிழக்கு மீதான யுத்தம் இராணுவத்தின் கைகளில் மட்டும் ஒப்படைக்கப்பட்டது. யுத்தத்தை மக்கள் மயப்படுத்தும் போது யுத்தத்தின் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய அரசியல் நெருக்கடிக்கு அஞ்சி அப்போதைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் அதனைத் தவிர்த்திருக்கக்கூடும். ஆனால் சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஜனாதிபதியானதும் இந்நிலைமை மாறிற்று.

பதினேழு வருட ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் பின் கைப்பற்றிய ஆட்சிப் பதவியை சந்திரிக்கா தக்கவைக்க வேண்டுமாயின் அவர் புதுமைகளை நடத்திக்காட்ட வேண்டிய தேவையிருந்தது. பனிப்போர் முடிவுற்ற உலகப்புறநிலையில் இலங்கை கேந்திர முக்கியத்துவத்தை இழந்திருந்தது. முன்பிருந்த வல்லரசுப் போட்டி இல்லாத சூழலில் இலங்கைக்கு பேரம் பேசும் சக்தியும் இல்லாதிருந்தது. இந்நிலையில்

**போர் மக்கள் மயப்படும் போது எழுகின்ற அற்புத ஆற்றலால் வன்னிமண் மீது அன்றைய சிறிலங்கா தொடுத்த போர் தோற்கடிக்கப்பட்டது. சிறிலங்காவின் படைத்துறை இயந்திரமே சர்வ நாசமாகியது. சிறிலங்கா தரப்பு எடுத்த முயற்சிக்கு தமிழர்களின் மறுத்தான் கொடுத்த விளைவு இது. தமிழனின் வாள் என்றுமில்லா கூர்மையுடனும், நிமிர்வுடனும் விளங்கியது.**

பொருளாதாரத்தில் அற்புதங்களையோ, புதுமைகளையோ நிகழ்த்திக் காட்டுவதற்கான சூழல் பெருமளவு சந்திரிக்காவிற்கு இருக்கவில்லை. அவர் சிங்கள மக்களின் மனங்கவரும் புதுமையை நிகழ்த்த வேண்டுமாயின் யுத்தத்தைத் தவிர்ந்த வேறு துறை அவருக்கு தெரியவில்லை. எனவே மொத்தக் கவனமும் யுத்தத்தின் மேல் செலுத்தப்படலாயிற்று.

**கு.கவியழகன்**

யுத்தத்தை சிங்கள மக்கள் மயப்படுத்துவது யுத்தத்தின் வெற்றிக்கு இன்றியமையாததென அவர் கண்டு கொண்டார். அவ்வாறே யுத்தத்தின் வெற்றியை அரசியல் அறுவடையாக்கிக் கொள்ள வேண்டுமாயின் யுத்தம் மக்கள் மயப்பட வேண்டியது அவசியமென்பதையும் அவர் புரிந்து கொண்டார்.

யுத்தத்தை மக்கள்மயப்படுத்தியதன் மூலம் நாட்டின் எல்லா வளத்தையும் யுத்தத்திற்காக திருப்பும் சக்தியை அவர் பெற்றிருந்தார். மொத்தச் சக்தியையும் பிரயோகித்து சிங்களமக்கள் மிகவும் கிடைத்தற்கரிய வெற்றியாகக் கருதும் யாழ்ப்பாணம் மீதான வெற்றியை ஈட்டிக்காட்டினார். யுத்தத்தை நோக்கி திருப்பப்பட்டிருந்த சிங்கள மக்களுக்கு இது ஒரு மகத்தான புதுமையாகத் தெரிந்தது. தமிழருடனான சமாதானம் தேவையற்ற ஒன்றாகியது. சர்வ உலக நாடுகளும் சந்திரிக்காவின் யுத்தத்தின் மூலமான சமாதானம் என்ற மார்க்கத்திற்கு ஆதரவு வழங்கின. யுத்தம் வெல்லப்பட்டுவிடும் என்று நம்பப்பட்ட சூழலே இதற்கு காரணமாக இருந்தது.

சிறிலங்கா எடுத்துக் கொண்ட இந்த வழிமுறைக்கு மறுத்தானாக தமிழர் தேசமும் முன்னெப்போதும் இல்லாதவாறு மக்கள்மயப்பட்ட யுத்தத்திற்காக தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது. அப்போது யுத்தகளமாக இருந்த வன்னிப்பெருநிலப்பரப்பு போர்ச்சன்னதம் கொண்டு நின்றது. யுத்தம் விடுதலைப் புலிகளினுடையதாக இருக்க வில்லை. வன்னியின் ஒவ்வொரு ஜீவனினுடையதாகவும் போர் உருமாறியிருந்தது. இதன் வியாபகமாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்த யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலும் பல்கலைக்கழக சமூகத்தினால் நடாத்தப்பட்ட ‘பொங்குதமிழ் எழுச்சி’ மகத்தான ஆற்றல் கொண்டதாக இருந்தது. புலம்பெயர் தமிழர்கூட போருக்காக உழைத்துக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் சமூகமாக இருந்தனர். போர் மக்கள் மயப்படும் போது எழுகின்ற அற்புத ஆற்றலால் வன்னிமண்மீது அன்றைய சிறிலங்கா தொடுத்த போர் தோற்கடிக்கப்பட்டது. சிறிலங்காவின் படைத்துறை இயந்திரமே சர்வ நாசமாகியது. சிறிலங்கா தரப்பு எடுத்த முயற்சிக்கு தமிழர்களின் மறுத்தான் கொடுத்த விளைவு இது. தமிழனின் வாள் என்றுமில்லா கூர்மையுடனும், நிமிர்வுடனும் விளங்கியது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வருவதற்காக தமிழரின் இந்த மிடுக்கால் உருவான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அழிப்பேன் என்றே ஆணைகேட்டார். இது சிங்கள மக்களை மீள ஒருதடவை யுத்தத்தை நோக்கி திருப்பக்கூடிய ஒரு செயல். மகிந்த பதவிக்கு வந்ததும் சந்திரிக்காவிற்கு இருந்த அதே நிலைமை அல்லது அதைவிட மோசமான நிலைமையே அவருக்கு இருந்தது. அதாவது புதுமை நிகழ்த்திக் காட்டவேண்டியவராக இருந்த அவருக்கு யுத்தத்தை தவிர வேறு துறை வாய்ப்பாக இருக்கவில்லை. சர்வதேச சமூகம் அவரது வரவை வெறுத்ததனால் பொருளாதாரத் துறையில் புதுமை நிகழ்த்துவது நினைத்தும் பார்க்கக்கூடியதல்ல. எனவே யுத்தம் ஒன்றே வழி. அவர் யுத்தத்தை மக்கள் மயப்படுத்தினார். இது சிறிலங்காவின் எல்லா வளமும் யுத்தத்தை நோக்கித் திரும்ப வாய்ப்பளித்தது. சிங்கள மக்கள் எதிர்நோக்கும் எல்லாவித நெருக்கடிகளின் மத்தியிலும் யுத்தமயப்பட்டு நிற்கும் சிங்கள மக்களிற்கு அவர் காண்பிக்கும் யுத்த வெற்றி உவப்பானதாக இருக்கிறது.

இப்பொழுது தமிழர் தரப்பிற்கு இருக்கும் மார்க்க மென்ன.? சிங்களத் தரப்பு யுத்தமயப்படுவதை மாற்றியமைக்க வேண்டும். தமிழர் தரப்பின் யுத்தம் இன்னும் மக்கள் மயப்பட வேண்டும்.



www.eelamview.com

www.eelamview.com



# சர்வதேச பொருண்மிய உதவிகள் சிங்கள அரசிற்குத் தடைப்படுகின்றன

மகிந்த அரசிற்கெதிராக அண்மைக்காலமாக அதிகரித்து வரும் சர்வதேச அதிருப்தி சிங்கள அரசைப் பலவகைகளிலும் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

அரசிற்கெதிரான அரசியல்ரீதியான கண்டனங்களை எச்சரிக்கைகளை மகிந்த அரசு புறந்தள்ளினாலும், சர்வதேசத்திடமிருந்து கிடைக்கும் பொருண்மிய உதவிகள் தடைப்படும் போது அதைத் தாங்கமுடியாது சிங்களம் திணறுகின்றது.

**சிங்களப் படைகளின் மனித உரிமை மீறல்கள் எல்லைகடந்து செல்கின்றன. அவற்றைத் தட்டிக்கேட்க முற்படும் உலக அமைப்புக்களும் ராஜதந்திரிகளும் சிங்கள அரசால் வசைபாடப்படுகின்றனர். இவை காரணமாக நாளுக்கு நாள் சிங்களத்தின் நற்பெயர் கெட்டுவருகின்றது. நிதி உதவிகளும் குறைந்துவருகின்றன. சர்வதேச நாடுகளின் கண்டனங்களும் - எச்சரிக்கைகளும் அதிகரித்துவருகின்றன.**

சிங்கள அரசின் போர்ச்செலவு, இப்போது பெருமெடுப்பில் அதிகரித்து விட்டது. நவீனகரமான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் மகிந்த அரசு ஆர்வம் காட்டிவருகின்றது.

தனது வான்படைக்கான போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதில் பெருந்தொகை நிதியை ஒதுக்க வேண்டியநிலையில் மகிந்த அரசு உள்ளது. இதுபோன்று தனது தரைப் படையின் நகர்வாற்றலை மேம்படுத்த வென டாங்கிகள் - ஆட்லறிகள் உட்பட மரபுப்போர் ஆயுதங்களையும் சிங்கள அரசு வாங்கிக் குவித்துவருகின்றது.

தனது ஆட்பலத்தையும் சிங்களத்தின் முப்படைகளும் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் அதிகரித்த இராணுவச் செலவுகளை ஈடுகட்ட உலக நாடுகளின் உதவி நிதிவளங்களையே சிங்கள அரசு நம்பியிருக்கின்றது.


ஆனால், சிங்களம் எதிர்பார்க்கும் இந்த உதவிநிதிகளை வாரி வழங்கும் நிலையில் உலக நாடுகள் இல்லை என்ற செய்தி சிங்கள அரசிற்கு உணர்த்தப்பட்டுள்ளது.

இங்கிலாந்து - ஜேர்மனி உட்பட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சிங்களத்திற்கான உதவிநிதிகளை முடக்கி மகிந்த அரசிற்கு அதிர்ச்சி வைத்தியம் அழித்து வருகின்றன. போருக்கென நிதியுதவியளிக்க அமெரிக்கா உட்பட மேலும் பல்வேறு நாடுகள் மறுத்துவருகின்றன.

மகிந்த அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சிங்களத்திற்கு பெரும் எடுப்பில் உதவி நிதி வழங்க உலக நாடுகள் மறுப்புத் தெரிவிக்கும்போது அதை ஈடுகட்டுவதற்காக சர்வதேச நிதி நிறுவனங்கள் - வங்கிகள் என்பவற்றிடமிருந்து கடனாக நிதியுதவிபெற மகிந்த அரசு முயற்சித்தது.

**எல்லாளன்**

எனினும், மகிந்த ராஜபக்ச எதிர்பார்க்காத வகையில் எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியின் எதிர் நடவடிக்கையால் அந்த முயற்சியும் கைகூடாமல் போகும் நிலை எழுந்துள்ளது. ஐக்கியதேசியக் கட்சியும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் மகிந்த அரசிற்கு குறித்த நிதி நிறுவனங்கள் கடனாக நிதி வழங்கக் கூடாது என்று அந்த அந்த நிதிநிறுவனங்களையே உத்தியோக பூர்வமாகக் கோரிவருகின்றார். தமது கோரிக்கையை மதிக்காமல் மகிந்த அரசிற்கு கடன் வழங்கினால் அந்தக் கடனை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடமேறினால் அடைக்க முயலமாட்டாதென்று உலக நிதி நிறுவனங்களை மிரட்டியுள்ளனர்.




ஐ.தேகட்சியினரின் இந்த மிரட்டலால் உலக நிதிநிறுவனங்கள் மிரண்டு போயுள்ளன. கொடுக்கும் கடன் மீளத் திரும்ப வாய்ப்பில்லை என்ற நிலையில் மகிந்த அரசிற்குக் கடன் வழங்கமுடியாது என்று அவை முடிவெடுத்துள்ளன.

**அரசியல் ரீதியாகவும் - பொருண்மிய ரீதியாகவும் மகிந்த அரசு சந்தித்துவரும் நெருக்கடிகளால் சிங்களஅரசு பலவீனமடைந்துவருகின்றது. இந்த ஆட்சிப் பலவீனம் அதன் படைகளது உளவுரணையும் பாதித்துவருகின்றது. நவீனரக ஆயுதங்களைப் படையினருக்குப் பெற்றுக்கொடுத்தாலும் அவற்றைத் தாக்கமுறும் வகையில் பயன்படுத்தும் உளவுரண் இன்மையால் சிங்களத்தின் போரிடும் திறனும் பாதிக்கப்பட்டுள்ளது.**

இதனால் இராணுவச் செலவை ஈடுகட்ட முனையும் மகிந்த அரசின் முயற்சியும் பிசுபிசுத்து விட்டது.

இதனால், சமூக நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பெருமெடுப்பில் குறைக்க மகிந்த அரசு முயற்சிக்கிறது. இதனால், அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்களிற்கான கொடுப்பனவுப் பணத்தைப் போர்ச்செலவிற்குத் திருப்பிவிட மகிந்த அரசு முனைகின்றது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

போர் விரிவடைந்து வருவது உல்லாசப் பயணிகளின் வருகையையும் பாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான நாடுகளின் வரிசையில் இலங்கை இல்லை என்ற மனித உரிமை அமைப்புக்களின் நிலைப்பாட்டால் இலங்கைத் தீவிற்கு பயணம் போகவேண்டாம் என்று பல் வேறு நாடுகள் தங்களது மக்களைக் கேட்டுள்ளன.

அண்மையில் இலங்கை வந்து சென்ற ஐ.நா.வின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான பிரதிச் செயலர் ஜோன்ஸ் கோல்ம்ஸ் அவர்கள் கொழும்பில் வெளியிட்ட அறிக்கையும் சிங்களத்தின் நற்பெயரையும் சிதைத்து விட்டதுடன், உலகநாடுகளின் உதவிகளையும் தடுத்துள்ளது.

சூடானுக்கு அடுத்ததாக உதவி வழங்கும் நிறுவனங்கள் செயற்பட முடியாத நாடாக இலங்கையே உள்ளது என்று பிரகடனப்படுத்தியுள்ளார்.

இப்போது சிங்கள அரசிற்கு ஜப்பான் - சீனா உட்பட சில நாடுகள் இராணுவ உதவிகளையும் நிதி உதவிகளையும் வழங்கிவருகின்றன.

ஆயினும், உலகளாவிய ரீதியில் சிங்கள அரசிற்கு எதிராக அதிகரித்துவரும் கெட்ட பெயர் காரணமாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் கெட்ட நாடுகள் என்ற வகைக்குள் உலக மக்களால் பார்க்கப்படும் நிலை உருவாகிவருகின்றது. இந்த அவப்பெயரிலிருந்து விடுபடுவதற்காக குறித்த அந்த நாடுகளும் தமது உதவி நிதிகளை வருங்காலத்தில் குறைக்கலாம் என்று சிங்கள ஆய்வாளர்களே மகிந்த அரசை எச்சரிக்கை செய்கின்றனர்.

கிழக்கைச் சிங்களப் படைகள் ஆக்கிரமித்த பின்னர் அங்கே அபிவிருத்திக்கென்று கூறிக்கொண்டு உலக நாடுகளிடமிருந்து கணிசமான நிதி உதவிகளை மகிந்த அரசு பெற்றுவருகின்றது. ஆனால், அபிவிருத்தி நிதிகளை, தனது இராணுவச் செலவுகளை ஈடுகட்ட திசைதிருப்பி வருவது சிங்களத்தின் வழமையாக உள்ளது.

சிங்கள அரசைப் பொறுத்தளவில் தனது சொந்த நிதிபலத்தின் அடிப்படையில் போரை நடாத்த அதனால் முடியாது. இரவல் நிதிப்பலத்திலேயே இதுவரை காலமும் தங்கிநின்று தமிழருடனான போரைச் சிங்கள ஆட்சியாளர்கள் நடாத்திவருகின்றனர். இதுவரை காலமும் உதவிவழங்கும் உலக நாடுகளும் ஏன்! எதற்கு! என்று சிங்கள அரசைக் கேள்விகள் கேட்காமல் உதவி நிதிகளை அள்ளிக்கொடுத்துக் கொண்டிருந்தனர்.

இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தமிழரின் இனப் பிரச்சினையை அரசியல் வழியில் தீர்க்கமுனையாமல் இராணுவ வழியில் சிங்கள ஆட்சியாளர்கள் அணுகிவருவதால் பெருமளவு மனித உயிர்களும் அழிகின்றன. பெரும் பொருண்மிய வீண்விரயமும் நடைபெறுகின்றது.

சிங்களப் படைகளின் மனித உரிமை மீறல்கள் எல்லைகடந்து செல்கின்றன. அவற்றைத் தட்டிக்கேட்க முற்படும் உலக அமைப்புக்களும் ராஜதந்திரிகளும் சிங்கள அரசால் வசைபாடப்படுகின்றனர். இவை காரணமாக நாளுக்கு நாள் சிங்களத்தின் நற்பெயர் கெட்டுவருகின்றது. நிதி உதவிகளும் குறைந்துவருகின்றன. சர்வதேச நாடுகளின் கண்டனங்களும் - எச்சரிக்கைகளும் அதிகரித்துவருகின்றன.

இவ்விதம் அரசியல் ரீதியாகவும் - பொருண்மிய ரீதியாகவும் மகிந்த அரசு சந்தித்துவரும் நெருக்கடிகளால் சிங்களஅரசு பலவீனமடைந்து வருகின்றது. இந்த ஆட்சிப் பலவீனம் அதன் படைகளது உளவுரணையும் பாதித்து வருகின்றது. நவீனரக ஆயுதங்களைப் படையினருக்குப் பெற்றுக்கொடுத்தாலும் அவற்றைத் தாக்கமுறும்வகையில் பயன்படுத்தும் உளவரண் இன்மையால் சிங்களத்தின் போரிடும் திறனும் பாதிக்கப்பட்டுள்ளது.

வன்னி முன்னரங்குகளில் அண்மைக்காலமாக நடைபெறும் சண்டைகளின் விளைவுகள் மேற்குறித்த கருத்தை ஆமோதிக்கும் வகையிலேயே உள்ளன.

பொருண்மிய ரீதியில் மகிந்த அரசு சந்திக்கத்தொடங்கியுள்ள நெருக்கடிகள் அதன் போர் இயந்திரத்தைப் பாதிக்கத்தான் போகின்றது. இனிவரும் காலத்தில் சிங்கள அரசு சந்தித்த பொருண்மிய நெருக்கடிகளின் விளைவுகளை இலங்கைத் தீவின் மக்கள் கண்டுணரத்தான் போகின்றனர்.



www.eelamview.com

www.eelamview.com



***"கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியும் என்பது நிட்சயம்."***

**- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -**

# அந்நியர் ஆட்சியும் மக்கள் எதிர்ப்பும்

நீரும் எண்ணெய்யும் இரண்டறக்கலக்கும் சாத்தியம் மிகக்குறைவு. பிரிந்துவாழ விரும்புவோர் தமக்கான பிரத்தியேக வாழ்விடத்தையும் தமது தேவைக்குகந்த ஆட்சிக்கட்டமைப்புக்களையும் நிறுவுவார்கள். இதை அனுமதிக்க விரும்பாதோர் இராணுவ நடவடிக்கை உட்படப் பல தடங்கல்களைப் போடுவார்கள். இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தித் தாங்கொணாத் துன்பதின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம் என்று தலைவர் அவர்கள் கூறியுள்ளார். விடுதலைபெற நினைத்து அதற்காக உழைக்கும் மக்களை எந்த சக்தியாலும் நிறுத்திவிட முடியாது; இது உலக நியதி. பணிந்து போக விரும்புவோர் தமது இனத்தின் அழிவைத் தாமாகவே தேடிக்கொள்வார்கள். மக்கள் மனதில் அச்சமின்மையைத் தோற்றுவிப்பது தான் தலைவர்களின் பணி என்று வேதகால ஜனகரும், யக்ஞவல்க்கியரும் சொல்லி வைத்திருக்கின்றார்கள். தமிழீழம் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டியதில்லை. எமது தலைமைத்துவம் அத்தனை சிறப்பானது.

இலங்கையில் 2 முக்கிய தேசிய மொழிகள் 3 முக்கிய தேசிய இனங்கள் 4 பிராதான மதங்கள் காணப்படுகின்றன. கூட்டுறவுச் சமஷ்டி (COOPERATIVE FEDERALISM) மதச்சார்பின்மை, மொழிவாரி மாநில அரசமைப்பு என்பனவற்றை இந்தியா கடைப்பிடிக்கின்றது. மிகக்கொடிய சாதிக்கொடுமை இந்தியாவில் காணப்படுவது பிறிதோர் விடயம். இந்தியாவுடன் ஒப்பிடும்போது சிறிலங்காவில் அனைத்தும் எதிர்மறையாகவிருக்கின்றன. 1978ஆம் ஆண்டின் அரசியல் சாசனம் ஒரு சாராரின் மதத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றது. சுதந்திரம் பெற்ற அதே வருடம் 900,000 மலையகத் தமிழர்களின் குடியுரிமையை அரசு பறித்துவிட்டது. 1978ஆம் ஆண்டின் அரசியல் சாசனம் அதிகாரப் பகிர்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கின்றது. இலங்கையின் இரு பிரதான தேசிய இனங்களில் ஒன்றான தமிழர்கள் அடுத்த இனத்தவரான சிங்களவர்களை அந்நியர்களாகவும் எதிரிகளாகவும் பார்ப்பதில் தவறில்லை. சிங்களவர்களும் தமிழர்களை அப்படித் தான் பார்க்கின்றார்கள்.


சனாதிபதி பதவியை எடுத்துக்கொண்டால் இந்திய சனாதிபதி அமெரிக்கா, ருஷ்யா, பிரான்சு, சிறிலங்கா ஆகிய நாடுகளின் சனாதிபதிகளிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்டவர். பின் கூறிய நான்கு நாட்டுத் தலைவர்களும் சர்வவல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரம் உடையவர்கள். இலங்கையின் முன்னாள் கவர்னர் - ஜெனரலைப் போன்று இந்திய சனாதிபதி மிகக்குறைந்த அதிகாரங்களை உடையவர். அவர் இந்தியப் பிரதமரின் ஆலோசனைப்படி நடப்பவர் என்பதோடு தேசத்தின் தலைவர் என்ற அந்தஸ்தோடு பதவி வகிப்பவர். இருப்பினும் உலகின் மக்கள் தொகையில் கூடிய நாடொன்றின் தலைவர் என்பதால் இந்திய சனாதிபதிக்கு மிகப்பெரிய மதிப்பும் மரியாதையும் உண்டு. இனங்களுக்கிடையிலான சமத்துவத்தைப் பேணுவதற்கு சனாதிபதிப் பதவியை இந்தியா பயன்படுத்துவதை அவதானிக்கமுடிகின்றது. தென்மாநிலங்கள் அனைத்தையும் சேர்ந்தவர்கள் சனாதிபதிப் பதவி வகித்துள்ளனர். கேரளத்தைச் சேர்ந்த நாராயணன் ஒரு தலித், இப் பதவியை மிகச்சிறப்பாக வகித்துள்ளார். அவருடைய மனைவியும் பிள்ளைகளும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுகின்றது. ஒன்றுக்கும் மேற்பட்ட சீக்கியர்கள்,முஸ்லிம்கள் இந்திய சனாதிபதி ஆகியுள்ளனர். ஒரு சீக்கியரும் இடம் பிடித்துள்ளார். இப்போது முதன் முறையாக ஒரு பெண் இந்திய சனாதிபதி ஆகியுள்ளார்.

சிறிலங்கா 1948 தொடக்கம் இன்றுவரையில் 19 பிரதமர்களையும், 1972 தொடக்கம் இன்றுவரை ஆறு சனாதிபதிகளையும் கண்டிருக்கின்றது. பிரதமர்களிற் சிலர் ஒரு தடவைக்கு மேல் பதவி வகித்திருக்கிறார்கள். 1972 - 1978 வரையில் சனாதிபதி பதவி வகித்த வில்லியம் கோபல்லாவ நிறைவேற்று அதிகாரம் உள்ள சனாதிபதியல்ல. ரணசிங்க பிறேமதாச தவிர்ந்த ஏனைய பிரதமர்களும், சனாதிபதிகளும் உயர் குடிப்பிறந்த கொயிகம சாதியினர். பௌத்த சிங்களவர்கள் அல்லாதோர் இப் பதவிகள் எதனையும் வகிக்கமுடியாது என்பது எழுதப்படாத சட்டம். ஏப்பிரல் 2004இல் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமர் பதவியைக் கைப்பற்ற முயற்சித்தார். தமிழர் என்ற ஒரு காரணத்திற்காக அவர் மகிந்த ராஜபக்ஷவிடம் தோல்வியுற்றார்.

சிறிலங்கா முப்படைகளிலும் இதையொத்தநிலை காணப்படுகின்றது. சிறிலங்காப் பொலிஸ்படையும் அதே நிலையில் உள்ளது. 1960 தொடக்கம் இவை படிப்படியாகச் சிங்கள மயமாக்கப்பட்டு இன்று ஒரு வீதத்திலும் குறைந்த தமிழ் - முஸ்லீம்களுடன் முழு அளவு சிங்கள அமைப்புக்களாக இடம்பெறுகின்றன. சிங்களவர்களுக்குச் சிங்கள இராணுவம் இருப்பதுபோல் தமிழர்களுக்குப் புலிப்படை ஒன்றுதான் பாதுகாப்பு அரணாக இருக்கின்றது. தமிழினம் இன்று இலங்கையில் உயிர்வாழ்கின்றதென்றால் அது விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தால் மாத்திரமே என்பது தெரிந்த விடயம். ஈழத்தமிழர்களுக்கு உயிரழிவு, சொத்தழிவுகளை ஏற்படுத்துவதோடு தமிழர்களுடைய மண்ணில் சிங்களக் குடியேற்றம் நடாத்தி அவற்றிற்குப் பாதுகாப்பு வழங்கும் கருவியாகச் சிங்கள இராணுவம் இடம் பெறுகின்றது. அதே சமயம் சிங்கள இராணுவம் புரியும் அனைத்து வன்முறைகளுக்கும் சிறிலங்கா அரசும் அதன் அங்கமான நீதி நிர்வாகமும் சட்டமூலமான பாதுகாப்பும் ஒத்தாசையும் வழங்குகின்றன. சிங்களவர்களை ஈழத்தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்களாகவும் அந்நியர்களாகவும் பார்ப்பதற்குச் சிங்கள இராணுவம் காரணமாக அமைகின்றது.

எல்லை கடந்து அல்லது கடல் கடந்து வந்தவர்கள் மாத்திரம் அந்நியர்கள் அல்லர். தோல் நிறம் மாத்திரம் அந்நியப்படுத்தாது. ஒரே தரைப்பரப்பில் வாழ்ந்துகொண்டு அந்நியராகும் சந்தர்ப்பம் நிறையவுண்டு. எம்மோடு ஒத்துவராதவர்கள், எமக்குத் தீங்கு விளைவிப்பவர்கள், எம்மால் அந்நியர்களாகக் கணிப்பிடப்படுவார்கள். எமது தனித்துவமான தேசிய நலனில் தமது சொந்த நலனுக்காகத் தலையிடும் எவரும் அந்நியர்கள் என்ற அழைப்புக்குள் வருவார். அந்நியர்களின் ஊடுருவல்களைப் புறம்தள்ளப் போரிடவேண்டிவரினும் அதைக் கட்டாயமாகச் செய்யவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தன்மானம் உள்ள இனத்திற்கும் உண்டு.

சரியாக 150 வருடத்திற்கு முன்பு ஆசிய வரலாற்றின் முதலாவது ஆங்கிலேயருக்கு எதிரான தேசியப் போர் இந்திய மண்ணில் நடைபெற்றது. 15ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயர்களின் வருகையோடு ஏற்கனவே ஆசிய மக்கள் பல பாதிப்புக்களை அனுபவித்துள்ளனர். ஒரு புதிய மதமும் முன்பு அறியப்படாத பாரம்பரியமும் ஆசியக் கண்டத்திற்கு வந்துசேர்ந்தன. காலப்போக்கில் அது நிரந்தரமாகிவிட்டது. போர்த்துக்கேயர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தர்களும் ஆங்கிலேயர்களும் ஆசியாவிற்கு வந்துசேர்ந்தனர். மூவரின் வருகையால் தமிழீழ மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வரலாற்று நோக்கில் பார்த்தால் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள் ஆவர். போத்துக்கேயர்களும் ஒல்லாந்தர்களும் ஈழத்தமிழர்களைத் தனி நிர்வாகமாக ஆட்சி செய்தனர். ஆங்கிலேயர்கள் முதலில் இக்கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். பின்பு மிகப்பெரிய தீமையைத் தமிழர்களுக்குச் செய்துவிட்டார்கள். அதன் பிரதிபலனை நாம் இப்போது இடைவிடாது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.



போத்துக்கேயர், ஒல்லாந்தர் போல் ஆங்கிலேயர்கள் ஈழத்தமிழர்கள் வாழ்ந்த வடக்குக் கிழக்கைத் தனியாக 1802-1833 இடையிலான காலத்தில் ஆட்சி செய்தனர். தமிழர்களுக்கு தனிவாழ்விடமும் பாரம்பரியமும் உண்டென்பதை இலங்கையின் முதலாவது காலனித்துவச் செயலர் சேர் ஹியூக் கிளெக்ஹோர்ன் உறுதிசெய்துள்ளார். (FIRST COLONIAL SECRETARY OF CEYLON, SIRHUGH CLEGHORN) மிகப் புராதன காலம் தொட்டு இத் தீவை இரு இனங்கள் தமக்குள் பங்கிட்டுள்ளன என்ற செய்தியோடு வடக்குக் கிழக்குத் தமிழர் பகுதியாகும் என்றும் மதம், மொழி, பழக்கவழங்கங்களில் இரு இனங்களும் வேறுபடுகின்றன என்ற தகவலும் அவருடைய குறிப்பில் காணப்படுகின்றது. 01.யூன்.1799 என்ற திகதியிடப்பட்ட இக் குறிப்பு அரச வெளியீடுகளில் 1855, 1883, 1891ஆம் ஆண்டுகளில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இத்தகைய உறுதியான நிலைப்பாட்டை எடுத்த ஆங்கிலேய அரசு 1833ல் தமிழ்ப்பகுதிகள், கண்டி இராட்சியம் அமைந்த மலைப்பகுதி, சிங்களவர்கள் வாழ்ந்த கடலோரப் பகுதிகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து சிலோன் அரசாங்கத்தை (CEYLON GOVT) உருவாக்கியது. இந்த நிர்வாக ஒழுங்கை ஏற்படுத்தியவர்கள் 1948ல் சிங்களவர்களுக்குச் சுதந்திரம் வழங்கியபோது தமிழர் நலனில் அக்கறை எடுக்காமல் விட்டுள்ளனர். ஆட்சியைச் சிங்களவர்களிடம் ஒப்படைத்த ஆங்கிலேயர்கள் தமது நாட்டுப் பாராளுமன்ற ஆட்சி முறையையும் விட்டுச்சென்றனர். எண்ணிக்கையில் கூடியவர்கள் வைத்ததே சட்டம் என்பது இந்த ஆட்சி முறையின் சாராம்சம். இது ஈழத்தமிழினத்திற்குப் பாரதூரமான கெடுதல்களை விளைவிக்கும் ஆட்சிமுறையாக இடம்பெறுகின்றது. அது ஈழத்தமிழர்களின் தலைவிதியைச் சிங்களவர்களிடம் ஒப்படைத்துள்ளது.

ஆங்கிலேயர்கள் அறிமுகம் செய்த ஆட்சி முறையின் தோல்விதான் தமிழீழக் கோரிக்கைக்கு வழிவகுத்துள்ளது. அதுமாத்திரமல்ல தமிழர்களின் இருப்பையே இந்த ஆட்சிமுறை பாதிக்கின்றது. சிங்கள மேலாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடாக தமிழர்களின் வலுவைக் குறைப்பதற்காக வடகிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கல்லோயா மற்றும் மகாவலித்திட்டங்கள் தமிழர்களின் மண்பறிப்பு உபாயங்களாக ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குடியேற்றங்கள் மூலம் ஈழத்தமிழர்களை வலுவிழக்கச் செய்யமுடியும் என்ற சித்தாந்தத்தைத் தாங்கிய மலிங்க ஹேர்மன் குணரத்தினாவின் ஒரு இறைமை நாட்டை நோக்கி (MALINGA HERMANGUNARATNA: FOR A SOVEREIGN STATE) என்ற நூலில் வடகிழக்கைத் துண்டாடுவதற்காகவே மகாவலித் திட்டமும் வேகமான சிங்களக் குடியேற்றமும் ஆரம்பிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டுள்ளது. குடியேற்றம் செய்யப்படும் சிங்களவர்களுக்கு ஆயுதப்பயிற்சியும் நவீன ஆயுதங்களும் வழங்கப்படவேண்டும் என்ற பரிந்துரையும் இந்த நூலில் காணப்படுகின்றது. அது ஏறத்தாள ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மகாவலித்திட்டத்திற்கும் சிங்கள இராணுவப் பரப்பலுக்கும் நேரடித்தொடர்பு இருப்பதை மறுக்கமுடியாது.

அமெரிக்கச் சுதந்திப்போராட்டத்திற்கு நிகரானதொரு ஆயுதப்போராட்டமாக மே 1857ல் நடந்த இந்திய இராணுவப்

→

**விடுதலைபெற நினைத்து அதற்காக உழைக்கும் மக்களை எந்த சக்தியாலும் நிறுத்திவிட முடியாது; இது உலக நியதி. பணிந்து போக விரும்புவோர் தமது இனத்தின் அழிவைத் தாமாகவே தேடிக் கொள்வார்கள்.**



www.eelamview.com

www.eelamview.com



போராட்டம் வர்ணிக்கப்படுகிறது. இதைச் சிப்பாய்க் கலவரம் (MUTINY) என்று ஆங்கிலேய ஆய்வாளர்கள் குறிப்பிடுவார்கள். அதே ஆங்கிலேயர்கள் இந்தி, உருது மொழிகளில் கதர்(GADAR)என்று இந்தப் போராட்டத்தை பெயரிட்டுள்ளனர். அதாவது நம்பிக்கைத் துரோகிகள் என்று அர்த்தம். நாம் ஐரோப்பிய நாகரிகத்தை அவர்களுக்கு தரவந்தோம். அவர்கள் எம்மைத் தாக்கி வஞ்சித்துவிட்டார்கள் என்பது கதர் என்ற சொல்லின் அர்த்தம். THE LAST MUGHAL அதாவது கடைசி முகலாய மன்னன் என்று பொருள்பட அண்மையில் வெளிவந்த நூலை எழுதியவர் ஸ்கொட்லாந்துக்காரரான வில்லியம் டாலி றிம்பிள்(WILLIAM DALY RIMPLE) ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வரமுன்பே புதுடில்லி முகலாயப் பேரரசு மறைந்துவிட்டது. மராட்டியர்கள் புதுடில்லியைத் தம்வசம் வைத்திருந்தனர். தென்இந்தியாவிலும் முகலாய ஆட்சி என்றோ நின்றுவிட்டது. முகலாய மன்னர்களின் வம்சத்தினரான சக்கரவர்த்தி பகதூர் ஷா ஸபர் ஏழ்மை நிலையில் புதுடில்லியின் ஒரு மூலையில் வாழ்ந்தார். அவர் பெரும் உருது மொழிப் புலவரும் கூட. இது ஏழ்மைக்கு காரணமாக இருக்கலாம். இவரை முன் நிறுத்தி ஆங்கிலேயர் ஆட்சிக்கெதிரான போராட்டம் அன்று நடந்தது.

1857இல் ஆசியக்கண்டத்தின் மிகப்பெரிய இராணுவமாக ஆங்கிலேயர்கள் இந்திய மண்ணில் நிறுவிய இந்திய இராணுவம் இடம்பெற்றது. அதில் இந்து, முஸ்லிம், சீக்கியர், ராஜபுத்திரர் என பல இனத்தவர் இருந்தனர். சரியாக 150 வருடங்களுக்குமுன் வெடித்த இந்தப் போராட்டத்தில் 130,000 இந்தியப் படையினர் ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். இந்து, முஸ்லிம், சீக்கியப்படைகள் புதுடில்லியைநோக்கிப் படையெடுத்தன. ஏராளம் ஆங்கிலேயர்கள் கொல்லப்பட்டனர். படையெடுப்பின் நோக்கம் முகலாயச் சக்கரவர்த்திகளின் வாரிசு பகதூர் ஷா ஸபரை (BAHADUR SHAH ZAFAR) அரியாசனம் ஏற்றுவதுதான். ஆனால் படையெடுப்புத் தோல்விகண்டுவிட்டது. பல சிற்றரசர்கள் உதவ மறுத்ததோடு பிரிட்டிசாருக்கு உதவி வழங்கினார்கள். போரின் போக்கு ஆங்கிலேயர் பக்கம் திரும்பியபின் வெள்ளைப்படைகள் மிகவும் கொடூரமாக நடந்துகொண்டன. சக்கரவர்த்தி ஸபர் ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டத்திற்கு நேரடி ஊக்குவிப்பு வழங்கவில்லை. ஆனால் அவர் மிகவும் கொடூரமான முறையில் தண்டிக்கப்பட்டார். அவருடைய மகன்களின் தலைகள் ஒரு வெள்ளித்தட்டில் வைத்து அவருக்குப் பரிசாக வழங்கப்பட்டன. 84 வயதினரான அந்த வயோதிபர் பர்மாவிற்கு நாடுகடத்தப்பட்டார். ஸ்கொட்லான்டிஷ் கைலாண்டர் (SEOTTISH HIGHLANDERS) படைகள் பல வாரங்களாகப் பொது மக்களைக் கொன்றுகுவித்தன. 1857 போராட்டத்தின் முக்கிய செய்திகள் பல கிடைக்கின்றன. இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து போரிட்டனர். கூடுதலான உயிரிழப்பை புதுடில்லியில் வாழ்ந்த முஸ்லிம் பொதுமக்கள் அனுபவித்தனர். எந்தவொரு மக்கள் கூட்டத்தையும் வன்முறையால் அடக்கி ஆட்சிசெய்யமுடியாது என்ற வரலாற்றுப் பாடம் கற்றுணரப்பட்டது. இந்தியச் சுதந்திரம் நெருங்கிய போதுதான் இந்து முஸ்லிம் பிளவு தோன்றியது. மே 2007ல் இந்திய பாகிஸ்தான் ஆகிய இரண்டுமே தத்தம் நாடுகளில் 1857 சம்பவங்களை வைபவ ரீதியாக நினைவு கூர்ந்தன. 1857போர் ஆரம்பித்தபோது யான்சி ராணியின் வயது 20 மாத்திரமே. அவர் வெள்ளையரை எதிர்த்துப் போராடியபடி களத்தில் வீழ்ந்தார். வெற்றி அல்லது மரணம் என்று களமாடிய அவரை எதிர்த்து நின்ற வெள்ளைத்தளபதி “இணையற்ற தைரியம் வாய்ந்தவர்” என்றார்.



**- கலாநிதி க. சோமாஸ்கந்தன் -**

1815ல் வீழ்ந்த கண்டி இராட்சியத்தில் 1817-18 காலப் பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான பாரிய போரட்டம் நடந்தது. ஆங்கிலேயர் ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவரும் அளவிற்கு அது மலைநாட்டில் பரவலாக நடந்தது. கடைசி மன்னன் சிறி விக்கிரம ராஜசிங்கனின் வாரிசு என்று தன்னைப் பிரகடனப்படுத்திய துரைசுவாமி என்பான் கதிர்காமம் சென்று திரும்பியபின் கிளர்ச்சியை ஆரம்பித்தான். கொடுங்கோலாட்சி நடத்திய சிறி விக்கிரம இராஜசிங்கனை வெளியேற்ற உதவிய ஆங்கிலேயர்கள் தம்மிடம் ஆட்சியை ஒப்படைப்பார்கள் என்று கண்டித்தலைவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் கண்டியைத் தமது பிடிக்குள் வைத்திருந்தனர். துரைசுவாமியின் தலைமையை சக்தி வாய்ந்த வடா (VADDA) இனக்குழுத்தலைவர் கிருலே கெதர மொகொத்தல ஏற்றுக்கொண்டார். பிரிட்டிஷ் படைகளின் பதிலடி மிகக்கொடூரமாக இருந்தது. முக்கிய கண்டி இராச்சியக் குடும்பத் தலைவர்களும் ஆண்களும் உயிரோடு விட்டு வைக்கப்படவில்லை. அதே காலத்தில் பல தொற்று நோய்களும் காட்டுத்தீபோல் பரவின. பிரிட்டிஷ் துருப்புக்கள் நடத்திய படுகொலைகள் 1819 வரை நீடித்தன.

சுதந்திரம் சும்மா கிடைப்பதில்லை, அதைப் போராடித் தான் பெறவேண்டும். இந்த உண்மையைக் கென்னியா நாட்டின் கறுப்பின மக்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடியபோது உணர்ந்தனர். 1895ல் கிழக்கு ஆபிரிக்கப் பாதுகாப்பு நாடுகள்(EAST AFRICAN PROTECTOR-ATE) என்ற அமைப்பை உருவாக்கி அதற்குள் கென்னியா, யுகான்டா ஆகியவற்றை உள்ளடக்கி பிரிட்டிசார் 1963ஆம் ஆண்டுவரை ஆட்சிசெய்தனர். பெருமளவு எண்ணிக்கையிலான வெள்ளையர்களை அவர்கள் கென்னியாவின் வளமான மலைப்பகுதியில் குடியேற்றினர். கென்னியாவின் மிகப்பெரிய இனக்குழுவான கிக்கியூவின் (KIKYU)வாழ்விடமான அந்த மலைப்பிரதேசத்திலிருந்து அவர்கள் விரட்டப்பட்டனர். இதனால் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான இயக்கம் உருவாகியது. 1950களில் ஜொமோ கென்யாட்டா(JOMO KENYATTA)என்பவர் தலைமையில் மௌமௌ (MAU MAU) என்ற இரகசிய எதிர்ப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. கென்யாட்டா இங்கிலாந்தில் தங்கிப் படித்தவர். தனது மக்களின் இழந்த நிலங்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற அவாக் கொண்டவர். வெள்ளையர்களை விரட்டுவதற்கு அவருடைய இயக்கம் வன்முறையில் இறங்கியது.

ஆனால் அரசு பரந்துபட்ட படை நடவடிக்கைகளை ஆரம்பித்து ஜொமோ கென்யாட்டா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். படைபலத்தைப் பெருக்குவதற்கு தெற்கு ஆபிரிக்காவில் இருந்து வெள்ளைக்கூலிப் படைகளை அரசு இறக்குமதி செய்தது. விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரிட்டிஷ் ஆட்சி எடுத்த முன்னெடுப்புக்கள் சர்வதேச சட்டங்கள், நியமங்கள் பலவற்றை மீறும் வகையில் இருந்தன. கடும் சித்திர வதைக்கு உட்படுத்தல், கால வரையறையின்றித் தடுத்து வைத்தல் போன்றவற்றை அரசு நடைமுறைப்படுத்தியது. முகமூடி அணிந்த தலையாட்டிகள் முன் கிக்கியூ மக்கள் நிறுத்தப்பட்டனர். தலையாட்டத்திற்கு அமைவாக இரகசியத் தடுப்பு முகாம்களுக்கு அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இரகசியத் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பும் பாதையை வெள்ளை இராணுவம் ‘பைப் லைன்’ (PIPE LINE)என்று அழைத்தது. 1954இல் மாத்திரம் 52,000 கைதிகள் பைப்லைன் மார்க்கமாகத் தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். கிக்கியூ, போராளிகளின் வெள்ளையர்கள் மீதான தாக்குதல்கள் மிகவும் கொடூரமாக இருந்தன. ஆனால் படைகள் கொன்ற வர்களின் எண்ணிக்கையை அவர்களால் எட்டிப்பிடிக்க முடியவில்லை.

தடுப்பு முகாம்களில் நடந்த வதைகள் பற்றிய விரிவான விவரங்கள் அண்மையில் வெளியிடப்பட்ட கென்னியா பற்றிய இரு முக்கிய ஆவண நூல்களில் காணப்படுகின்றன. (1. IMPERIAL RECKONING - THE UNTOLD STORY OF BRITAIN'S GULAG IN KENYA BY CAROLINE ELKINS. PUBLISHED BY HENRY HOLT. 2. HISTORIES OF THE HANGED: THE DIRTY WAR IN KENYA AND THE END OF EMPIRE BY DAVID ANDERSON. PUBLISHED BY W.W.NORTAN) 1950, 1960களில் இங்கிலாந்தில் வெளிவந்த பத்திரிகைகள் தமது நாட்டுப் படைகள் செய்த வன்முறைகளை மூடிமறைத்தன, அதே சமயம் கிக்கியூ போராளிகள் செய்தவற்றை பெரிதுபடுத்தின. வதைமுகாம்களில் ஆண்களின் விதைகளை அகற்றுதல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல், தாக்குதல் நாய்களை ஏவிவிடுதல், மின்சாரம் பாய்ச்சுதல், நீரில் மூழ்கடித்தல் போன்றவை சாதாரணமாக நடத்தப்பட்டன. இப்படியான கொடூரங்களில் வெள்ளைப்படைகளோடு இணைந்து செயற்பட்ட கறுப்பின ஒட்டுக்குழுக்களும் பங்கேற்றன. போரை முடிவிற்கு கொண்டுவர முடியாமல் திணறிய பிரிட்டிஷ் அரசு 1960இல் அவசர கால நிலையை அகற்றியது. விடுதலை செய்யப்பட்ட ஜொமோ கென்யாட்டாவுடன் பேச்சு நடத்தி 12 டிசெம்பர் 1963 ஆம் நாள் கென்னியாவுக்குச் சுதந்திரம் வழங்கியது. பயங்கரவாதி என்று பட்டஞ்சூட்டப்பட்ட கென்யாட்டா கென்னியாவின் முதலாவது அரசுத் தலைவராகப் பதவியேற்றார். அரச விருந்தினராக அவர் இலண்டன் சென்றபோது இரண்டாம் எலிசபெத் மகாராணி அவருக்கு கௌரவ வரவேற்பு அளித்தார்.

**எல்லை கடந்து அல்லது கடல் கடந்து வந்தவர்கள் மாத்திரம் அந்நியர்கள் அல்லர். தோல் நிறம் மாத்திரம் அந்நியப் படுத்தாது. ஒரே தரைப்பரப்பில் வாழ்ந்துகொண்டு அந்நியராகும் சந்தர்ப்பம் நிறையவுண்டு எம்மோடு ஒத்து வராதவர்கள், எமக்குத் தீங்கு விளைவிப்பவர்கள் எம்மால் அந்நியர்களாகக் கணிப்பிடப்படு வார்கள். எமது தனித்துவமான தேசிய நலனில் தமது சொந்த நலனுக்காகத் தலையிடும் எவரும் அந்நியர்கள் என்ற அழைப்புக்குள் வருவார். அந்நியர்களின் ஊடுருவல்களைப் புறம்தள்ளப் போரிட வேண்டிவரினும் அதைக் கட்டாயமாகச் செய்யவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தன்மானம் உள்ள இனத்திற்கும் உண்டு.**

இந்திய உபகண்டம் பாகப்பிரிவினை செய்யப்பட்ட போது இஸ்லாம் மதத்தை மாத்திரம் பொது அம்சமாகக் கொண்டு மேற்கு கிழக்கு பாகிஸ்தான்கள் ஒன்றிணைக்கப்பட்டன. இந்தியாவின் இரு பெரிய செவிமடல்களாகத் தொங்கும் மேற்கும் கிழக்கும் நெடுங்காலம் ஒன்றாக இருக்கமாட்டாவென்று அப்போதே ஆருடம் கூறப்பட்டது. இன, மொழி, பண்பாடு உணவு, வாழ்வுமுறை போன்ற பலதரப்பட்ட விதத்தில் இரு பகுதி மக்களும் வேறுபட்டனர். மதத்தால் அவர்களை ஒன்றிணைக்க முடியவில்லை. மேற்கு பாகிஸ்தான் தரைப்பரப்பில் பெரியது ஆனால் கிழக்கிலும் பார்க்க மக்கள் தொகையில் சிறியது. பாகிஸ்தான் தலைவர்களும் இராணுவ அதிகாரிகளும் மேற்குத் தான் உண்மையான பாகிஸ்தான், கிழக்கு தமக்குத் தரப்பட்ட ஆள்புலம் என்று நம்பினர். வங்காள மொழிபேசும் கிழக்கின் மக்கள் மீது தமது உருது மொழியைத் திணிக்க மேற்குப் பாகிஸ்தான் தலைமை முனைந்தது. வங்காள மொழி உருதுவிலும் பார்க்க பழமை வாய்ந்தது, இலக்கியத் திறன்மிக்கது. வெளிநாட்டு உதவிகளில் 70 வீத்ததை மேற்கு தன்னிடம் வைத்துக் கொண்டது. மேம்பாட்டுத் திட்டங்கள் ஒன்றுமே கிழக்கில் செய்யப்படவில்லை. பாகிஸ்தான் இராணுவத்தில் 90 வீதமானோர் மேற்கைச் சேர்ந்தவர்கள். நிர்வாக சேவையில் 85 வீதமானோர் மேற்கு பாகிஸ்தானியர்கள்.

கிழக்கு பாகிஸ்தான் பிரிந்து தனிநாடாவதற்கு மேற்கு பாகிஸ்தான் இராணுவத்தின் கொடுங்கோலாட்சி உடனடிக் காரணமாக அமைந்தது. ஒருவரை ஒருவர் அந்நியர்களாகப்பார்த்தனர். உனது நிலத்தில் நான் நிற்கும் போது உனக்கு நான் அந்நியன். எனது நிலத்தில் நீ நிற்கும் போது எனக்கு நீ அந்நியன் என்று ஒரு வங்காளக் கவிதை நிலைமையைப் படம்பிடித்துக் காட்டிகிறது. 176,000 துருப்புக்களை கிழக்கு பாகிஸ்தானில் நிறுத்திய மேற்குப் பாகிஸ்தான் நிலைமையை மோசமாக்கியது. இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அனுப்பிய முப்படைகளின் உதவியோடு 1971ல் வங்காளதேசம் என்ற புதிய நாடு கிழக்குப் பாகிஸ்தானில் தோன்றியது.

அண்மையில் இது பற்றிப் புதியதோர் கருத்துமோதல் ஆரம்பித்துள்ளது. உத்தரப்பிரதேச மாநிலத் தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் இந்திராகாந்தியின் பேரன் ராகுல் எனது பாட்டிதான் வங்காளதேசம் நாட்டை உருவாக்கினார் என்று கூறினார். இது மிகப்பெரிய உணர்வலைகளை எழுப்பியது. சுதந்திரத் திற்காகப் போரிட்டவர்களும் அதற்கான இழப்புக்களைச் சந்தித்தவர்களும் நாங்களே என்று உரத்த குரல்கள் வங்காளதேசத்தில் இருந்து கேட்டன. நீங்கள் உதவியதை மறுக்கமாட்டோம். ஆனால் போரிட்டவர்களும் விலைகொடுத்தவர்களும் நாங்கள் தான் என்ற குரல் மீண்டும் மீண்டும் கேட்டது. இது தொடர்பாக ஆய்வாளர்கள் மூடிய புத்தகங்களை மீண்டும் திறந்தனர். முஜிபுர்ரகுமான். வங்காள தேசத்தின் தந்தை தன்னிடம் கூறிய தகவல் என்று இந்திராகாந்தியின் நம்பிக்கைக்குரிய குல்டிப்நய்யார் பத்திரிகைகளில் பின்வருமாறு எழுதினார். பாகிஸ்தான் இராணுவத்தால் கொல்லப்பட்டோரின் ஆகக்குறைந்த எண்ணிக்கை 3மில்லியன். பாகிஸ்தான் இராணுவம் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய வங்காளப் பெண்களின் எண்ணிக்கை 2இலட்சத்திலும் கூடுதலானது. இந்தியா உதவியது உண்மை என்றாலும் தமதுவிடுதலையை வென்றெடுத்தவர்கள் வங்காளதேச மக்கள் தான் என்பது வரலாற்றாசிரியர்கள் முடிவு. தமது விடுதலையைத் தாமே போராடிப் பெறவேண்டும் என்பது காலத்தால் அழியாத உண்மை. தமிழீழம் இதை நன்றாக உணர்ந்துள்ளது.



www.eelamview.com

# கிழக்கில் குறுங்களச் செயற்பாடுகளுக்கான எதிர்கால வாய்ப்புக்கள்



> போரியலின் இன்றைய விருத்தி நிலையானது மரபுப்போர், மரபற்ற போர்முறை மற்றும் கெரில்லா உத்திகள் என்பவற்றிற்கு இடையேயான வரைகோடுகளை மங்கப்பண்ணிவிட்டது. பிரித்தானிய செஞ்சட்டைக் கால மரபுப் பரிமாணம் இப்போது எந்தக் களத்திலும் இல்லை. பெருநடவடிக்கை ஒன்றுடன் தொடர்புறாத, வேறு மூலோபாய நோக்கங்களைக் கொண்ட, சிறு வேலைகள் அனைத்தும் படைகளாலும் செய்யப்படுகின்றன. கிடைக்கக்கூடிய அனைத்து உத்திகளினதும் கலவையான அச் செயற்பாடுகள் குறுங்களச் செயற்பாடுகள் எனப்படுகின்றன.

**சேனாதி**

அம்பாறை மாவட்டத்தில் செப்ரெம்பரின் 12ம், 13ம் 14ம் திகதிகளில் வக்குமுட்டியா, கஞ்சிகுடிச்சாறு ஆகிய இடங்களில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருக்கு எதிரான தொடர்ச்சியான தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பு ஊடகங்களால் கவனமாகத் தவிர்க்கப்பட்ட அந்தத் தாக்குதல்கள் மூன்றிலும் குறைந்தது 10 அதிரடிப் படையினர் கொல்லப்பட்டார்கள். அதே போன்று இன்னொரு மடங்கினர் காயமடைந்திருந்தார்கள். பின்னர் 17ம் திகதியன்றும் வக்குமுட்டியாவில் ஒரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு அதிலும் இரு சிறப்பு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா படைத்துறையின் சார்பில் இந்தச் செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு, வேறு திரிப்புச் செய்திகள் வெளியிடப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் பதுங்கிச் சுடுவோர், கண்ணி வெடிப் பிரிவு, வேவு அணி மற்றும் தாக்குதல் அணி ஆகியவற்றின் போராளிகள் பங்கேற்றிருந்தனர். இத்தாக்குதல்களில் விடுதலைப் புலிகளின் தரப்பில் இழப்புக்கள் ஏற்படவில்லை. அதிலிருந்து, இவை சிறிய அணிகளைப் பயன்படுத்தி திகைப்பையும் விரைந்த பின்வாங்குதலையும் உத்தியாகக் கொண்டு செய்யப்பட்டவை என்று தெரிகிறது.

மட்டக்களப்பிலும், செப்ரெம்பர் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் கரடியனாறு, இலுப்பையடிச் சேனை, ஆயித்தியமலை ஆகிய மூன்று இடங்களில் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. அம்பாறையைப் போலல்லாது, இத்தாக்குதல்கள் மக்கள் நடமாட்டமுள்ள நெடுஞ்சாலையை அண்டி இடம்பெற்றிருப்பதால், இத்தாக்குதல்கள் பற்றிய செய்திகளைத் தவிர்க்க முடியாத நிலையில், அரசின் படைத்துறை ஊடகங்களில் திரிக்கப்பட்ட தகவல்கள் வெளியிடப்பட்டன. அரச தரப்புச் சேதங்கள் குறைத்துச் சொல்லப்பட்டன.

இத்தகைய குறுங்களச் செயற்பாடுகள் ஊடகத்தினரிடையே பெரிய ஆர்வத்தை ஏற்படுத்துவதில்லை. ஒரு மூலையிலேயே இடம்பிடிக்கும் இச்செய்திகளைப் பார்ப்பவர்கள் கூட அவற்றைப் பெரிதுபடுத்துவதில்லை.

ஆனால், போரியல் ஆய்வாளர் இவ்வாறான நிகழ்வுகளைத் திருப்புமுனைகளின் அளவுகோல்கள் என்று அழைக்கின்றனர்.

போரியலின் இன்றைய விருத்தி நிலையானது மரபுப்போர், மரபற்ற போர் முறை மற்றும் கெரில்லா உத்திகள் என்பவற்றிற்கு இடையேயான வரைகோடுகளை மங்கப்பண்ணிவிட்டது. பிரித்தானிய செஞ்சட்டைக் கால மரபுப் பரிமாணம் இப்போது எந்தக் களத்திலும் இல்லை.

பெருநடவடிக்கை ஒன்றுடன் தொடர்புறாத, வேறு மூலோபாய நோக்கங்களைக் கொண்ட, சிறு வேலைகள் அனைத்துப் படைகளாலும் செய்யப்படுகின்றன. கிடைக்கக்கூடிய அனைத்து உத்திகளினதும் கலவையான அச் செயற்பாடுகள் குறுங்களச் செயற்பாடுகள் எனப்படுகின்றன. தனது ஆதிக்கப் பரப்பு என்று அறிவிக்கப்பட்ட இடங்களை,'சம்பவங்கள்' என்றும் ஆய்வாளரால் வழங்கப்படும் குறுங்களச் செயற்பாடுகள் இடம்பெறாமல் பேணுவது, அப்பரப்பை ஆதிக்கம் செய்யும் படையின் பிரதான கடனாகும். அவ்விடத்தில் அப்படையின் செல்வாக்கிற்குச் சவால்கள் இருக்கும்வரை அங்கே முழுமையான கட்டுப்பாடு நிலவுவதாகச் சொல்லமுடியாது. ஏனெனில், அத்தகைய சம்பவங்களின் அதிகரிப்பு, போரின் திசையை வினைத்திறனுடன் மாற்றிவிடலாம்.

இதை விளங்கிக் கொள்வதற்கு ஈராக் களமுனை சார்ந்த அண்மைய நிகழ்வொன்றைக் குறிப்பிடலாம். செப்ரெம்பர் மாதத்தின் இரண்டாம் வாரத்தில், அமெரிக்க செனற்றின் முன்னிலையில், ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் நிலைகுறித்துச் சாட்சியமளித்த ஜெனரல் டேவிட் பெட்ராயுஸ், ஈராக்கின் சுனி இனப் பகுதியான அன்பாரில் சம்பவங்கள் வெகுவாகக் குறைந்ததாகவும் அது தமது படைகளின் செயல் முன்னேற்றத்திற்கான குறியீடு எனவும் சொல்லியிருந்தார்.

ஆனால், அமெரிக்க சனாதிபதியை நேரடியாகச் சந்தித்துப் பாராட்டுப் பெற்றிருந்த சுனி இனத் தலைவர் அபு ரிசா, மறுநாளே அன்பாரில் வைத்து சியாய் குழுவால் படுகொலை செய்யப்பட்டார்.

வல்லரசுக்களின் மூலோபாயங்களில் குறுங்களச் செயற்பாடுகள் விளைக்கும் தாக்கத்தை எடுத்துக்கூறும் இத்தகைய சம்பவங்கள் தொடருமானால், ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் முன்னேற்றம் பற்றிய ஜெனரலின் கருத்து பொய்க்கலாம்.

இலங்கையிலும், கிழக்கை முற்று முழுதாகக் கைப்பற்றிவிட்டதற்கான அடையாளமாக சிறிலங்கா அரசு குடும்பிமலை வெற்றியைக் கொண்டாடி 60 நாட்களில் குறுங்களச் செயற்பாடுகளை இயல்பாகச் செய்யும் ஆற்றலை புலிகள் நிரூபித்திருக்கிறார்கள்.

இது சிறிலங்கா அரசாங்கத்தின் மூலோபாய வகுப்பாளருக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும் விடயமாகவே இருக்கும். மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை உடனான தாழ் தீவிரப்போர் மூலோபாயமே இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகிறது.

தாழ்தீவிர யுத்தமானது இன்று பெரிய சக்திகளின் ஆசிபெற்ற எதிர்ப்புரட்சி மூலோபாயமாகக் கருதப்படுகிறது. அதனை, போராடும் சமூகத்திற்கு எதிரான தடைவிதிப்பு, பொருளாதார முடக்கம், கட்டாய இடப்பெயர்ப்பு, படுகொலை, வன்மம் மற்றும் சூரண்டல் என்றும் பொருட்கொள்ளலாம்.

இவற்றை சிறிலங்கா அரசு வடக்கிலும் கிழக்கிலும் முப்பது வருடங்களுக்கு மேலாகக் கடைப்பிடித்து வருகிறது. இந் நடைமுறைகளின் விளைவாக போரிடும் மனநிலை நீர்த்துப்போக வேண்டும் என்பதே ஆட்சியாளரின் எதிர்பார்ப்பு.

போராளிகளை மீனாகவும் தாய்ச் சமூகத்தை நீராகவும் கருதும் உத்திக்கு அமையவே சிறிலங்கா படைகளின் கிழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

எண்பதுகளின் நடுப்பகுதியில், தண்ணீரில் வலைபோட்டு மீனைப் பிடிக்கும் உத்தியாக சிறப்பு அதிரடிப்படையினரின் செயற்பாடு அமைந்திருந்தது. 'ஐம்பது இளைஞர்களைக் கொல் லுங்கள், அதில் ஐவராவது போராளி களாக இருப்பர்' என்ற இஸ்ரேல் புலனாய்வுத்துறையின் ஆலோசனை என்று சொல்லப்படும் உத்தியின்படி சிறப்பு அதிரடிப் படையினர் கிழக்கில் எண்ணற்ற இளைஞர்களைக் கொன்றனர், பெருந்தொகையானோரை உடல் ஊனமுறச் செய்து தடைமுகாம்களுக்கு அனுப்பினர்.

அச்செயற்பாடு பாரிய எதிர் விளைவுகளையே ஆட்சியாளருக்குக் கொடுத்தது. கிழக்கில் அதிக இளைஞர்கள் போராட்டத்தில் இணைய ஆரம்பித்தது இந்த சிறப்பு அதிரடிப்படையினரின் கொடுங்கோல் காலத்தில்தான்.

தண்ணீரை இறைத்துவிட்டு மீனைத் தனியாக்கும் முயற்சியாகவே கிழக்கின் தற்போதைய படைச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. தண்ணீர் எனப்படும் தாய்ச்சமூகத்தினர் கொடிய எறிகணை வீச்சு மற்றும் வான்படைத் தாக்குதல் என்பவற்றினால் கட்டாயமாக இடம்பெயர்க்கப்பட்டனர்.

போராளிகளின் செயற்பாடு அல்லது நடமாட்டம் இருந்ததாகக் கருதப்பட்ட அனைத்து இடங்களிலும் இருந்த மக்கள், கொழும்பின் இந்த மூலோபாயத்தின்படி, உடனடி அகதிகளாக்கப்பட்டனர். இன்றுவரை அதில் பெரும்பாலானவர்கள் தங்கள் இடங்களுக்கு அனுமதிக்கப்பட வில்லை. மக்களிடமிருந்து தனிமைப்பட்ட நிலையில் போராளிகளால் வினைத் திறனுடன் இயங்க முடியாது என்று, அந்தக் கட்டாய இடப்பெயர்ச்சியைத் திட்டமிட்ட சிறிலங்காவின் படைத்துறை விற்பன்னர்கள் கருதினர்.

ஆரம்பத்தில் அது ஒரு வெற்றி முகமான தோற்றப்பாட்டைக் கொடுத்திருந்தது. பின்புலத் தளங்கள் சிலவற்றை இழந்த நிலையில் போராளிகளின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டன. அந்த நிலையில் தனது நடவடிக்கைகள் வெற்றிகரமாக முற்றுப்பெற்றுவிட்டதாக கொழும்பு அறிவித்தது.

ஆயினும், பின்தள ஆதரவில் தங்கியிராத செயற்பாடுகளில் போராளிகள் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்துவது என்பது திருக்கை வலையில் நெத்தலியை பிடிக்க முயற்சிப்பது போன்றது என்பதைக் கொழும்பின் மூலோபாயவாதிகள் இப்போது கண்டறிந்திருப்பார்கள்.

குறுங்களச் செயற்பாடுகளுக்கு பின்தள ஆதரவு பெரிதாகத் தேவைப்படுவ தில்லை. தாய்ச்சமூகத்தின் ஆதரவு மட்டுமே அதற்குப் போதுமானது. பெருமள வான உறுப்பினரோ ஆயுதங்களோ உபகரணங்களோ அவசியமல்ல.

இயற்கையும் ஒரு கருவியாக குறுங்களச் செயற்பாடுகளில் பயன்படுவதுண்டு. பிரான்சில் ஹிட்லருக்கு எதிரான செயற்பாடுகளில் கடலின் வற்று மற்றும் பெருக்கு ஆகியவை பயன்பட்டன. வியட்நாமில் குளவிகள் கூடப் பயன்பட்டன.

குறுங்களச் செயற்பாடுகளின் வினைத்திறனுக்கு உலக வரலாறு நெடுகிலும் பதிவுண்டு. இரண்டாம் உலகப்போரின் காலத்தில் பிரான்சின் தேசபக்தர்களும் கொம்யூனிஸ்டுக்களும் நேசப்படையினரின் நாசவேலை மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு உதவி புரிந்ததோடு, எண்ணிலடங்காத குறுங்களச் செயற்பாடுளிலும் ஈடுபட்டனர்.

ஜெர்மனிய காவல் உலா அணியொன்றிற்கு தவறான திசையைக் காட்டிவிடுவதில் இருந்து தொடர் வண்டிகளைத் தடம்புரட்டுதல் வரை அச்செயற்பாடுகள் விரிவாக இருந்தன. பிரான்சை தனது மேற்கு நோக்கிய ஆதிக்க விரிப்பின் முதன்மைத் தளமாகக் கருதிய ஹிட்லர், அதன் முக்கிய மையங்களைச் சம்பவங்கள் இன்றிப் பேணுவதற்காக மேலதிக துருப்புக்களை அங்கே நிறுத்தவேண்டியிருந்தது.

தற்காலத்தில், இதன் சிறிய வடிவ ஒப்பீடாக, யாழ்ப்பாணம் மன்னார் வவுனியா ஆகிய இடங்களின் களமுனை தவிர்ந்த பகுதிகளில் துருப்புக்களை இழுத்து வைத்திருக்கும் குறுங்களச் செயற்பாடுகளைச் சொல்லலாம்.

வியட்நாமின் விடுதலைப் போரில் குறுங்களச் செயற்பாடுகளின் பங்கு தனித்துவமானது. அது மவோவின் மக்கள் மயப்படுத்தலை அடியொற்றியதாகத் திறந்துவிடப்பட்டிருந்தது.

பல பெருஞ்சமர்களின் முடிவுகளில் கொடியேற்றியது என்னவோ அமெரிக்கப் படைகள்தான். சைகனுக்கான கடைசிச் சமரின் காலத்தில் வியட்நாமியக் கேணல் ஒருவர் அதுபற்றிப் பேசும்போது, 'அப்படிப் பல சமர்களில் நாங்கள் பின்வாங்கியது உண்மையாக இருக்கலாம். ஆனால் போரின் முடிவைத் தீர்மானிக்கப்போவது அதுவல்ல,' என்று குறிப்பிட்டதாகச் சொல்வர்.

வியட்கொங் போராளிகளின் குறுங்களச் செயற்பாடுகள் அமெரிக்கப் படைகளிடையே உளவுரண் வீழ்ச்சி மற்றும் படைவிரயம் போன்ற நேரடித் தாக்கங்களை ஏற்படுத்தின. பெருஞ்சமர்கள் ஏதும் நடைபெறாத நிலையிலும் வியட்நாமிலிருந்து அமெரிக்க வீரர்களின் சடலங்கள் செல்வது நிற்கவில்லை. இது மறுவளத் தில் பாரிய அரசியல் மீளதிர்வுகளை ஏற்படுத்திற்று.

மொத்தத்தில் வியட்நாமின் பெருங்களங்களுக்கான வெற்றி தோல்வியை குறுங்களச் செயற்பாடுகள் ஏற்கனவே தீர்மானித்து வைத்திருந்தன.

தென்னாபிரிக்காவில் அரசியல் தீர்வின் தேவையை வலியுறுத்தியதில் அங்கு நிகழ்ந்த குறுங்களச் செயற்பாடுகளின் தாக்கத்தை எவரும் மறுக்கமுடியாது. அதேபோல, வட அயர்லாந்தின் போராட்டம் குறுங்களச் செயற்பாடுளை மையமாகக் கொண்டே அமைந்திருந்ததையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

மேற்சொன்ன இடங்களிலும் உலகின் வேறுபல முனைகளிலும் போராளிகளின் குறுங்களச் செயற்பாடுகள் ஆதிக்க சக்திகளின் தாழ்தீவிரப்போர் உபாயத்தை வெவ்வேறு மட்டங்களில் முறியடித்திருக்கின்றன.

கிழக்கு நடவடிக்கையின் பின்னான சிறிலங்கா படையினரின் செயற்பாடுகளில் எங்கும் முன்னேற்றம் காட்ட முடியாத தொய்வு நிலை தெரிகிறது. அதைப் பூசிமெழுக, கிழக்கில் ஆயுதம் பொறுக்கும் செய்திகளையும், வன்னிக்கள முனைகளில் பெருந்தொகையில் புலிகள் மடிவதான பரப்புரைகளையும், கப்பல் காட்டும் உத்திகளையும் சிறிலங்கா மூலோபாயவாதிகள் நம்பியிருப்பதாகத் தெரிகிறது. அதேவேளை, மெதுவாகச் சூடுபிடித்துவரும் கிழக்கின் குறுங்களச் செயற்பாடுகள், சிறிலங்காவின் படைப்பரம்பல் மூலோபாயத்தில் திருப்பங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன.

www.eelamview.com



# சிறிலங்காவின் நெருக்கடியான நிலையும் இலங்கைத்தீவின் எதிர்காலமும்

சிறிலங்கா அரசானது தற்போது மிகவும் இக்கட்டான நெருக்கடியான காலப்பகுதியில் நிற்கின்றது. ஒரு புறத்தில் பொருளாதார நெருக்கடிகளும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்களும் மக்கள் மீது பாரிய சுமையாக அழுத்துகின்றன. மறுபுறத்தில் சிறிலங்கா அரசோ எப்போதும் கவிழலாம் என்ற இக்கட்டான நிலையில் அரசினை நடத்திக்கொண்டிருக்கின்றது. எதிர்க்கட்சிகள் மகிந்த அரசினைக் கவிழ்ப்பதற்காக தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. அத்துடன் நவம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தவிருக்கும் 2008ம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது அதனைத் தோற்கடிக்கச் செய்வதற்கும் எதிர்க்கட்சிகள் தற்போதே முயற்சிகளை மேற்கொள்ளத்தொடங்கிவிட்டன. அவ்வாறு வரவுசெலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் பாராளுமன்றம் கலைக்கப்படுவது தவிர்க்கமுடியாத தாகிவிடும்.

இது இவ்வாறிருக்க, மகிந்த அரசானது அதனது மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் மனிதாபிமான நெருக்கடிகளை தமிழ் பேசும் மக்களின் மீது ஏற்படுத்துவது தொடர்பாகவும் கடுமையான கண்டனங்களையும் விமர்சனங்களையும் அனைத்துலக ரீதியாக முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது. அதாவது உலக நாடுகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஐ.நாவின் மனித உரிமை பேணுகைக்கான அமைப்புக்கள் என்பன இது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்த வகையில் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான சபையின் 6வது அமர்வில் அமெரிக்கா நாட்டைச்சேர்ந்த கரன் பார்க்கர் அம்மையார் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்கள் மிகவும் முக்கியமானதாகும்.




சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட உயர்ஸ்தானிகரின் அறிக்கைக்கு சிறிலங்கா அரசின் பதிலானது அடிப்படையில் ஐ.நாவின் கட்டமைப்புக்கள்,மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் என்பனவற்றை அச்சுறுத்தும் வகையில் அமைந்திருந்தது. இது மிகவும் பாரதூரமான விடயமாகும். சிலி நாட்டின் பினோசே அரசோ ஆர்ஜன்ரீனாவினை ஆட்சிபுரிந்த ஜெனரல்களோ அல்லது எல்சல்வடோர் மற்றும் குவாத்தமாலா போன்ற நாடுகளோ இது போன்றளவிற்கு மோசமான முறையில் ஐ.நாவின் மனித உரிமை அமைப்புக்களுடனோ அல்லது பன்னாட்டு மனித உரிமை நிறுவனங்களுடனோ முரண்பட்டது கிடையாது. ஏனெனில் ஐ.நா மனித உரிமை சபையே ஒரு நாடு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதா என்பதையும் அதற்கெதிராக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் தீர்மானிக்கும். சம்பந்தப்பட்ட நாடுகள் அல்ல. ஐ.நா மனித உரிமை சபை, விசேட தூதுவர்கள், மற்றும் ஐ.நா உயர்ஸ்தானிகர் ஆகியோர் சிறிலங்கா போன்ற நாடுகளின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்தால் இந்த சபை அமைக்கப்பட்டதன் நோக்கமே படுதோல்வி அடைந்துவிடும் என்று தனது உரையில் தெரிவித்திருந்தார்.

தற்போது ஜெனிவாவில் இடம்பெறும் ஐ.நாவின் மனித உரிமை சபை அமர்வுகளில் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளை மக்களுக்கு ஏற்படுத்தியமை தொடர்பாக சிறிலங்காவிற்கு எதிராக ஏதாவது தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் என்று சிறிலங்கா அரசு பெரிதும் அச்சம் அடைந்துள்ளது. இதன் காரணமாக சிறிலங்கா அரசின் வெளிவிவகார அமைச்சர், சமாதானச் செயலகப் பணிப்பாளர் போன்றவர்கள் ஐரோப்பிய பயணத்தினை மேற்கொண்டு பல்வேறு இராஜதந்திர கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

எவ்வாறெனினும், சிறிலங்கா அரசின் ஜனாதிபதி உட்பட அமைச்சர்கள் பலரும் தென்னிலங்கையில் உள்ள தமது சிங்கள பௌத்த பேரினவாதிகளையும் இதற்கு ஆதரவளிக்கும் சிங்கள மக்களையும் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதே தமது பதவிகளைத் தக்கவைப்பதற்கும், எதிர் காலத்தில் இடம்பெறும் தேர்தல்களில் தாம் வெற்றிபெறுவதற்கு அவசியம் என்றே செயற்படுகின்றார்கள். எனவேதான் சிங்கள மக்களையும் பேரினவாதிகளையும் மகிழ்விக்கும் வகையில் பன்னாட்டு சமூகம், ஐ.நாவின் அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் மீது கடுமையான அறிக்கைகளையும் பேட்டிகளையும் இந்த அமைச்சர்களும் முக்கிய அதிகாரிகளும் வழங்கி வருகின்றார்கள்.

> ***மகிந்த அரசானது அதனது மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் மனிதாபிமான நெருக்கடிகளை தமிழ் பேசும் மக்களின் மீது ஏற்படுத்துவது தொடர்பாகவும் கடுமையான கண்டனங்களையும் விமர்சனங்களையும் அனைத்துலக ரீதியாக முகம் கொடுக்கவேண்டியிருக்கின்றது. அதாவது உலக நாடுகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஐ.நாவின் மனித உரிமை பேணுகைக்கான அமைப்புக்கள் என்பன இது தொடர்பாகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.***

இந்த வகையில் ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் நாயகமும் மற்றும் அவசர நிவாரணப்பணிக்கான இணைப்பாளருமான சேர்.ஜோன் ஹோம்ஸ் அவர்களை ஒரு பயங்கரவாதி என்றும் விடுதலைப்புலிகளிடம் கையூட்டு பெற்றவர் என்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே கூறியது சர்வதேச ரீதியாக சிறிலங்கா அரசின் திமிர்த்தனமான போக்கினையும் மனித உரிமைகள் தொடர்பான அதனது அலட்சியத்தினையும் தெளிவாக வெளிப்படுத்த உதவியது. இது தொடர்பாக கருத்து தெரிவித்த ஒரு மேற்கு நாட்டுத் தூதுவர் இந்த அமைச்சர் தெருக்களை கூட்டுவதற்குதான் பொருத்த மானவர் என்று கூறினார். அண்மையில் பன்னாட்டு நெருக்கடிகளுக்கான குழுவின் பணிப்பாளரும் முன்னாள் அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சருமான காரத் இவான்ஸ் கொழும்பில் இடம்பெற்ற மநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போது சிறிலங்காவின் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாகவும் அதன் விளைவுகள் தொடர்பாகவும் கருத்துக்கள் கூறியமைக்காக தென்னிலங்கை ஊடகங்களாலும் மகிந்த அரசின் அதிகாரிகளாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

இதேபோன்று நியூயோர்க்கினை தலைமையகமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகளைக் கண்காணிக்கும் அமைப்பு, அனைத்துலக மன்னிப்புச் சபை என்பனவும் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா அரசும் அதன் படைகளும் மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றன என்று கூறியமைக்காக கடுமையாக விமர்சிக்கப்பட்டன. அத்துடன் புலிகளுக்கும் இந்த அமைப்புக்களுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும் புலிகளின் தனிநாட்டு கொள்கைக்கு இவை மறைமுகமாக உதவிபுரிகின்றன என்றும் தென்னிலங்கை ஊடகங்களாலும் மகிந்தவின் அரச அதிகாரிகளாலும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

இவ்வாறு ஒருபுறம் உள்நாட்டு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளும், மறுபுறத்தில் பன்னாட்டுச் சமூகம், ஐ.நா மற்றும் ஏனைய மனித உரிமை அமைப்புக்கள் சிறிலங்கா அரசின் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வருவதனால் சர்வதேச ரீதியாக தனிமைப்படுத்தப்பட்டுவிடப்படலாம் என்ற அச்சம் என மகிந்த அரசு பல்வேறு நெருக்கடிகளை பலமுனைகளில் ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டிய சிக்கலில் உள்ளது.

இந்த நிலையில், தனது அனைத்து நெருக்கடிகளையும் தீர்ப்பதற்கான சர்வரோக நிவாரணியாக போரினை தொடர்ந்து மேற்கொள்வதே ஒரேவழி என்று மகிந்த அரசு நம்புகின்றது. இதன் மூலம் மக்களின் அனைத்து நெருக்கடிகள், அரசின் ஊழல் மோசடிகள், முறையான ஆட்சியின்மை போன்ற அனைத்தும் போர் நடவடிக்கைகளின் பெயரால் மறக்கப்பட்டுவிடும் என்று மகிந்த அரசு நினைக்கின்றது.

தென்தமிழீழத்திலே களநிலைமைகளையும் பூகோள அமைவிடங்களையும் கருத்தில் கொண்டு விடுதலைப்புலிகள் தந்திரோபாய ரீதியல் சில பின்நகர்வு நடவடிக்கைகள் மேற்கொண்டதனை மகிந்த அரசு புலிகளுக்கு எதிராகப் பாரிய வெற்றியினை ஈட்டிவிட்டதாகப் பரப்புரை செய்துவருகின்றது. ஆனால் உண்மையில் சிங்கள அரசு தனது அரசியல் மற்றும் பதவி நலன்களுக்காக சிங்களப் படைகளை அளவுக்கதிகமான நிலப்பிரதேசங்களிலே பரப்புவதன் மூலம் முற்றுமுழுதான அழிவுப்பாதைக்கு தனது படைகளை இட்டுச்செல்கின்றது.

ஒரு பிரதேசத்தினை கைப்பற்றுவதற்கான வலிந்த தாக்குதல்களை மேற்கொள்ளும்போது, உதாரணமாக 100 சதுர கிலோமீற்றர் பரப்பளவினை கைப்பற்றுவதற்கு 1000 படையினர் போதுமென்றால் இதனை எதிரிகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்கு, பூகோள அமைவிடங்களைப் பொறுத்து இந்த தொகையின் பத்து மடங்கு அதிகமான படையினர் அதாவது 10000 வரையிலான படையினர் தேவைப்படுவார்கள். இந்த வகையிலே பரந்த வெளிகளையும் கடற்கரையோரங்களையும், காடுகள் மற்றும் மலைக்குன்றுகளைக் கொண்ட தென்தமிழீழத்தினை முற்றுமுழுதாக கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு மேலதிகமாக ஆகக் குறைந்தது 60,000-70,000 வரையிலான படையினர் தேவைப்படுவார்கள். இதுபோதாதென்று மன்னாரிற்கும் புத்தளத்திற்கும் இடையில் அமைந்துள்ள அரிப்பு, சிலாவத்துறை பகுதிகளில் நிலைகொள்வதற்கும் மேலும் ஆயிரக்கணக்கான படையினர் தேவைப்படுவார்கள்.

இதுதவிர, கடந்த பத்துவருடங்களுக்கு மேலாக விடுதலைப்புலிகள் எந்தவேளையிலும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்ற பயத்தின் காரணமாக

(11 ஆம் பக்கம் பார்க்க)

**புலித்தேவன்**



www.eelamview.com

www.eelamview.com





# ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

# நிறைந்த ஆளுமை...



காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் முதல்தர மாணவி, பின் நாட்களில் வேம்படி மகளிர் கல்லூரியின் க.பொ.த (உ/த) விஞ்ஞானபீட மாணவி, அந்த அமைதியான குகபாலிகா புலிகளோடு போனது எல்லோரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டது. வாய்திறந்து அதிகம் போசாத, ஆரவாரங்களில்லாத 'றோசாக்கா'வினுள்ளிருந்த நாட்டுப்பற்றை எவராலுமே ஏற்கனவே அடையாளம் கண்டிருக்கமுடியவில்லை.

அவரது நெருங்கிய தோழியின் தங்கையொருவர் 1989 இல் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட செய்தி காற்றில் பரவியது. செய்தியை கேள்வியுற்ற குகபாலிகா தோழியிடம் ஓடிவந்து, "எனக்கு ஒரு சொல்லுச் சொல்லியிருந்தா, நானும் சேர்ந்து போயிருப்பன். சொல்லாமல் போய்விட்டாள்"

என்று கவலைப்பட்டபோதுதான், அவளுக்குள்ளிருந்த விடுதலை நெருப்பைத் தோழியால் புரிந்துகொள்ள முடிந்தது.

நடேஸ்வராக் கல்லூரியில் படிக்கும் வரை ஒரு தவணைப் பரீட்சையில் குகபாலிகா முதலாமிடம் வந்தால், தோழி இரண்டாமிடத்தில் இருப்பர். மறு தவணையில் தோழி முதலாமிடத்துக்கு வர, குகபாலிகா இரண்டாமிடத்தில் இருப்பார். இருவருக்குமிடையிவான இடைவெளி ஒன்றோ, இரண்டோ புள்ளி களாகத்தான் இருக்கும். படிப்பில் முதல்தர போட்டியாளராக இருந்தவர்தான், குகபாலிகாவின் மிக நெருங்கிய நண்பி என்பது எல்லோரையும் வியப்படைய வைத்தது போலவே, அவர் போராடப் போனதும் பலருக்கு வியப்பைத் தந்தது.

படிப்பில் புலியாக இருந்தவர், விடுதலைப்புலியாக மாறியபோது இந்திய இராணுவம் எமது தாயகத்தைவிட்டு மெதுவாக விலகத்தொடங்கி விட்டிருந்தது. விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் 7ஆவது பாசறையில் படையத்தொடக்கப் பயிற்சியை முடித்துக்கொண்டு துளசி யாகியவர், அதன் பின் கப்புது – மண்டான் போன்ற வெளியான பகுதிகளில் எமது அணி களுடன் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டார். 1990ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் இலத்திரனியல் கற்கை – பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்ளப்பட்டார். இலத்திரனியலோடு தொலைத்தொடர்புக் கருவிகளைப் பற்றியும் படித்துக்கொண்டே வேலை செய்யும் வல்லமை பெற்றிருந்த அந்த அணியில், துளசியின் அறிவும் திறமையும் மற்றவர்களில் இருந்து அவரை தனித்து அடையாளம் காட்டியது. வெளியில் இருந்து வருகின்ற ஆசிரியர்கள் கற்பித்துவிட்டுப்போகும் விடயங்களை அன்றன்றே தனது அணிக்கு மீளவும் விரிவாகத் துளசி கற்பிப்பார். ஐயம் திரிபற அவர்கள் கற்பதற்கு அவர் தனது விரிவான பங்கை ஆற்றியிருந்தார். செயல் முறைகளை ஆசிரியர்கள் ஒருதடவை சொல்லிக்கொடுத்தபோதே தெளிவாக விளங்கிக்கொள்ளும் அவர், ஆசிரியர்கள் போனபின் அணியினரை மறுபடி மறுபடி செய்வித்து அவர்களின் நினைவில் பதியவைத்துவிட்டார்.

ஒலியலை வாங்கிகளைச் செய்வது, தொடர்பாடல் கருவிகளைத் திருத்துவது, நேரக்கட்டுப்பாட்டுப் பொறிகளைச் செய்வது என ஒரு வருடம் வரை அந்த அணியினரோடு அவரின் பணி தொடர்ந்தது. 1991ஆம் ஆண்டின் இறுதியில் இவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர், சிறப்புப் படையணி ஒன்றினுள் உள்வாங்கப்பட்ட போது, துளசியும் அவர்களில் ஒருவராகப் போயிருந்தார்.

சிறப்புப் படையணியின் தொலைத் தொடர்புப் பகுதிக்குப் பொறுப்பாக விடப்பட்ட துளசி, தனது அணியினரை வைத்துப் படையணியினருக்குத் தொடர்பாடல் கருவிகளைப் பயிற்றுவித்ததுடன், அவர்களுக்கான படையப் பயிற்சியளித்தலிலும் பங்கேற்றார். அதேநேரம் சிறப்பு அணியினருக்கான கராத்தேப் பயிற்சியில் ஈடுபட்டு மண்ணிறப் பட்டியைப் பெற்றுக்கொண்டார்.

1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதியவர்களைக்கொண்ட அணியொன்று துளசிக்கு வழங்கப்பட்டு, சிறப்பு அணியினருக்கான கணினிப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு, இவரின் பொறுப்பில் விடப்பட்டது. கணினி கற்கைநெறியில் தானும் ஈடுபட்டவாறே தனது பிரிவினருக்கும் கற்பித்துக் கொண்டிருந் தார் அவர். தேடல் அவரின் இயல்பாகவே இருந்ததால் கணினி பற்றிய ஆங்கில நூல்களைத் தேடி வாசித்து, அதைத் தமிழாக்கம் செய்து தனது பிரிவினருக்கும் வாசிக்கக்கொடுப்பார்.

"populer science" என்ற சஞ்சிகையில் what's new என்ற பகுதியில் ஒவ்வொரு முறை ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்புக்கள் பற்றிய தகவல்கள் வெளியாகும். அவற்றைத் தமிழாக்கம் செய்து "நவீன கண்டுபிடிப்புக்களில் சிறந்தவை" என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட்டிருந்தார்.

இந்த வேலைதான் தன்னுடையது என்ற வரையறை எதுவும் துளசிக்கு இல்லை. அவரது பிரிவினர் க.பொ.த (சா.த) தோற்றுவதற்கென கடுமையாகப் படித்துக்கொண்டிருந்த சில நாட்களில் அவர்களது சமயலுக்கான மரக்கறிகள், மாமிச வகையறாக்களைச் சந்தையில் வாங்கி, உரைப்பையில் வைத்து மிதிவண்டித் தாங்கியில் வைத்துக் கட்டியபடி துளசி மிதிவண்டியில் போவதைச் சாதாரணமாகக் காணலாம்.

தமது வேலைகளைக் கணினி மயப்படுத்தவிளைந்த எமது அமைப்பின் சில பிரிவுகளுக்கு, குறிப்பாகத் தமிழீழ நிதித்துறையின், பெண், ஆண் போராளிகளை உள்ளடக்கிய ஒரு அணியினருக்கு துளசி கணினியைக் கற்பித்தார்.

1994ஆம் ஆண்டின் இறுதிவரை தொடர்பாடல், இலத்திரனியல் பிரிவினருக்கும், கணினிப் பிரிவுக்கும் பொறுப்பாக இருந்தவரின் சுமை மிக அதிகம். பிரிவுகளின் விரிவு கருதி 1995ஆம் ஆண்டில் தொடர்பாடல், இலத்திரனியல் பகுதி தனியாகப் பிரிந்து இயங்க, துளசி கணினிப் பிரிவைத் தொடர்ந்தும் வழிநடாத்தினார். அதுவரை நாளும் சிறப்பு அணியினரின் பெண்களைக்கொண்ட இரு அணிகள், ஆண்களின் ஒரு அணி, கடலுக்கான சிறப்பு அணியினரின் இரு அணிகள், கடற்புலிகளின் படைத்துறைப் பள்ளி மாணர்வகள், தமிழீழ படைத்துறைப்பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கான தொடர்பாடல், இலத்திரனியல் வகுப்புகளுக்கான குறிப்புக்கள் துளசியால் தயாரிக்கப்பட்டு அவரது அணியினரால் கற்பிக்கப்பட்டிருந்தன.

போர்க்களம் போகும் அவா துளசியின் மனதில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டேயிருந்தது. 1991ஆம் ஆண்டில் ஆனையிறவு மீதான ஆகாய, கடல், வெளிச் சமருக்கு அழைக்கப்படாதவர் களில் துளசியும் ஒருவர். பெரும் சமர் ஒன்றுக்கான வாய்ப்பை இழந்த துளசிக்கு, இப்போது ஆவல் கட்டுமீறியது. துளசியின் வேண்டுகோளை மறுக்க முடியாத பொறுப்பாளர் அவரைப் போர்முனைக்கு அனுப்பினார்.

சூரியக் கதிர் – 01 எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் மகளிர் படையணி இவருக்கு சமர்க்கள வாய்ப்பைக் கொடுத்தது. அந்த நடவடிக்கை முடியும் வரை காவும் குழுக்கள் சிலவற்றுக்குப் பொறுப்பாக நின்று களத்தில் காயமுறும் போராளிகளின் உயிர் காக்கும் கடினப் பணியைச் செய்திருந்தார்.

இரண்டு அக்காக்களுக்கும் ஒரு அண்ணாவுக்கும் செல்லத்தங்கையாக வீட்டிலே மென்மையாக வளர்ந்திருந் தாலும் கடின உழைப்பிற்கு அவர் பின்னிற்பதில்லை. சிறப்பு அணியினரோ இளம் வயதினர். 10 கிலோமீற்றர் தூரத்தை அவர்கள் ஓடும் வேகத்தில் எவராலும் ஓடிவிடமுடியாது. அதிகாலை 4.30 மணிக்கு ஓடுபாதைக்குவரும் துளசி 10 கிலோமீற்றர் தூரத்தை தன்னுடைய வேகத்தில் ஓடி முடிப்பார். இரண்டு, மூன்று நாட்களின் பின் அவரது கால்கள் வீங்கும். ஒரு நாள் ஓய்வெடுப்பார். மறுநாள் ஓடுவார். அவரை "ஓடு" என்று எவரும் சொன்னதில்லை. ஓடாமல் அவரும் நின்றதில்லை. அதனால்தான் சூரியக் கதிர் – 01 சமர்க்களத்தின் கடுமை யான நாட்களிலும் சிரிப்பு முகத்துடன் கடமையைச் செய்ய அவரால் முடிந்தது.

விடுதலைப்புலிகள் மகளிர் படையணி தன்னை 2ம் லெப்.மாலதி படையணியாக உருமாற்றிக்கொண்ட போதும் உடனிருந்த துளசி, வலிகாமத்திற்கான சண்டை முடிந்து எமது அணிகள் தென்மராட்சிக்கு வந்தகையோடு படையணியின் போர்ப்பயிற்சி ஆசிரியர்கள் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார். அதன் பின் துளசிக்கு ஓய்வே இருக்க வில்லை. சூரியக் கதிர் – 02 எதிர் நடவடிக்கை, ஓயாத அலைகள் – 01, உண்மை வெற்றி – 01, 02, 03 எதிர் நடவடிக்கைகள், பரந்தன் ஆனையிறவு ஊடுருவித் தாக்குதல் என நீள்கிறது அவர் பயிற்சி கொடுத்து அணிகளைக் களமிறக்கிய நடவடிக்கைகள். கூடவே தானும் போய்விடுவார்.

வன்னியைத் துண்டாடும் முயற்சியில் ஒரு பாரிய படைநகர்வு சிறிலங்கா அரசால் தயார்ப்படுத் தப்படுவதை ஊகித்த தலைவர் அவர்கள் எதிர் நடவடிக்கைக்கு எமது அணிகளைத் தயார்ப்படுத் தினார். நெடுங்கேணி, மாங்குளம் பகுதிகளில் காவல் உலா போய் இடங்களை பழக்கப்படுத்தும் வேலைகளை எமது அணிகள் செய்தபோது துளசியும் கூடவே நடந்தார். அந்நேரம் மணலாற்றுப் பகுதியில் முன்னரங்க நிலை களைப் பலப்படுத்தவென லெப்.கேணல் தட்சாயினியின் கொம்பனி புறப்பட்டது. இதுவரை நாளும் பயிற்சி வழங்கியதிலேயே அதிக காலத்தைச் செலவிட்ட துளசி, தன்னைத் தாக்குதல் அணியோடு இணைத்துவிடும்படி அடம்பிடித்து, தட்சாயினியின் கொம்பனியின் பிளாட்டுன்களில் ஒன்றைப் பொறுப்பேற்றார்.

கனவு நனவான பூரிப்பு அவருக்கு. மார்பிலே கட்டியிருந்த மேலதிக ரவைக்கூட்டு அணியை நித்திரிரையில்கூட கழற்றியதில்லை. எந்நேரமும் சுடுகலனையும் தொலைத்தொடர்புக் கருவியையும் சுமந்தபடி எப்போதும் சண்டைக்குத் தயாரான நிலையில்தான் மணலாற்றிலே துளசியைக் காணலாம். ஒரு நாளில் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகளில் தனது பிளாட்டூனின் கண்காணிப்பிற்கு உட்பட்ட இடங்களைச் சுற்றிப்பார்த்து அணியினருடன் கதைத்திருப்பார். எதையும் தான் செய்த பின்னரே ஏனையவர்களுக்குக் கட்டளையிடுவதால் எல்லோராலும் விரும்பப்படுகின்ற அணி முதல்வியாக அவர் இருந்தார். தட்சாயினி வந்து பார்த்துத் திருத்தம் செய்கின்ற அளவிற்கு அந்தப் பிளாட்டூனில் சிறிதுதவறும் இருக்காது.

இவர்கள் மணலாற்றில் நின்றபோதே நெடுங்கேணியில் இருந்தும், பின் வவுனியாவிலிருந்துமாக சிறிலங்காப் படைகள் நகரத்தொடங்கிவிட்டிருந்தன. புளியங்குளச் சந்தியை மையமாகக் கொண்டு படைத்தளம் ஒன்றை அமைத்து, எமது அணிகள் எதிரி நகர்வை முடக்கிவைத்திருந்தன.

(11ஆம் பக்கம் பார்க்க)

---

**பிறப்பு** **30.01.1969**

## மேஜர் துளசி

**(இராமலிங்கம் குகபாலிகா)**

**வீரச்சாவு** **24.06.1997**

**திருப்பதி கல்லூரி வீதி, காங்கேசன்துறை.**

**சம்பவம்:– பெரியமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.**



www.eelamview.com

www.eelamview.com



(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

*தமக்கு எப்போது அழைப்புவரும் என்று ஆவலுடனிருந்த தட்சாயினியின் கொம்பனிக்கு வந்தது அழைப்பு. எதிரி நகர்வைத்தடுக்க அல்ல. ஊடுருவித் தாக்க. கொம்பனி தயாராகிவிட்டது. பிளாட்டூனின் வழிநடத்துனராக இருந்த துளசியை இப்போது நான் தட்சாயினியின் நிலைமை அறிவிப்பாளராக மாற்றிவிட்டதில் அவருக்குச் சிறிதும் உடன்பாடில்லை. களத்தில் நேரடியாக தான் நடவடிக்கையில் ஈடுபடுவதையே அவர் விரும்பினார். கொம்பனி மேலாளர் ஒருவரின் நிலைமை அறிவிப்பாளராகப் பணியாற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை நான் விளக்கிய பின்னரே, அரைமனதோடு ஒப்புக்கொண்டார்.*

*எதிரிகளால் சிறிதளவும் ஊகிக்கமுடியாத துணிகரத் தாக்குதலாகவே தாண்டிக்குள ஊடறுப்புத் தாக்குதல் தலைவர் அவர்களால் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த வெற்றிகரத் தாக்குதலில் துளசியின் பங்கு மறக்கமுடியாதது.*

*சில நாட்களிலிலேயே அடுத்த ஊடுருவித்தாக்குதலுக்கு அணிகள் தயாராகின. இப்போதும் தட்சாயினியின் நிலைமை அறிவிப்பாளராகவே துளசியும் தயாராகினார். பெரியமடு மீதான ஊடுருவித் தாக்குதலின்போது, தேவையேற்பட்டால் கொம்பனியை இரண்டாகப் பிரித்துச் சண்டையில் ஈடுபடுத்தும்படி தட்சாயினியிடம் நான் கூறியிருந்தேன். கொம்பனி பிரிவதாக இருந்தால், உள்நுழையும் மற்றைய அணியைக் களத்திலே வழிநடத்தும் பணியைத் தன்னிடம் தரும்படி தாட்சாயினியிடம் துளசி உடனேயே கேட்டிருந்தார்.*

*அணிகள் புறப்பட்டன. பெரியமடுவில் இருந்த சிறிலங்காப் படைத்தளம் ஊடுருவித் தாக்கப்பட்டது. களத்திலே அணியை வழிநடத்தும் கனவோடுபோன துளசியைத் தோழில் சுமந்தபடி திரும்பிவந்தன அணிகள். ஆளுமை மிக்க, அறிவாற்றல் உள்ள ஒரு போராளியை அதற்குள்ளேயே இழந்துவிட்டோமா என்ற வேதனை, துளசியை அறிந்த எல்லோருக்குள்ளும் எழுந்தது.*

*******

*கல்லூரித் தோழிகள் 'றோசா சரியான அமைதி' என்கிறார்கள். வேலைக்குப் போகின்ற அம்மா, அப்பா, பாடசாலை போகின்ற அக்காக்கள், அண்ணா என துளசியின் மாணவப் பருவம் தனிமையில் கழிந்ததால் அந்நேரம் அவர் அமைதியாக இருந்திருக்கலாம். ஆனால் சிறப்புப் படையணியினருக்கோ அவர் நகைச்சுவை உணர்வு மிகுந்த நல்ல பொறுப்பாளர். ஆயிரக்கணக்காணவர்கள் ஒத்த இலட்சியத்தோடு உடனிருந்த சூழல் அவரை கலகலப்பாக்கிவிட்டது.*

*போர்ப்பயிற்சி ஆசிரியராக அவர் எங்களோடு இருந்த காலத்தில் தான் வயதில் மூத்தவர் என்றோ முதுநிலை அதிகாரி என்றோ வேறுபாடு காட்டாமல் எல்லோரோடும் ஒரே மாதிரியாகவே பழகுவார். பலரோடு அவர் இருக்குமிடத்தில் இளையவர் யார், மூத்தவர் யார் என பார்ப்பவர்களால் அடையாளம் காணமுடியாது. மிகப்பெரிய நகைச்சுவை ஒன்றைச் சொல்லிவிட்டு அவர் அமைதியாகிவிடுவார். கேட்டவர்கள்தான் அடக்கமாட்டாமல் சிரித்துக்கொண்டிருப்பார்கள். பார்ப்பவர்கள் துளசி அமைதியானவர் என்று எண்ணத்தக்க வகையில் சூழல் இருக்கும் நெருங்கியவர்களுக்கு மட்டுமே அவரின் இயல்பு புரியும்.*

*1994ஆம் ஆண்டின் கரும்புலிகள் நாள் அன்று சிறப்புப் படையணியின் ஒன்றுகூடலில், துளசி எழுதி நெறியாள்கை செய்து, கணினிப் பிரிவினர் நடித்த கருத்தாழம்கொண்ட சமூக நாடகம் அவரின் கலையாற்றலை எல்லோருக்கும் வெளிக்காட்டியது. சிறப்புப் படையணியின் ஒன்றுகூடல்களின் போது "இம்முறை கணினிப்பிரிவு என்ன கலைநிகழ்ச்சி கொண்டுவந்திருக்கின்றது" என்று ஆவலுடன் எதிர்பார்க்கும் அளவிற்குத் துளசியின் நெறியாழ்கையில் உருவாகுகின்ற நிகழ்ச்சிகள் இருக்கும். ஒருமுறை நாடகம் என்றால் அடுத்தமுறை தொலைக்காட்சி நிகழ்வு, இன்னொருமுறை வேறொன்று என்று புதிது, புதிதாக அவரின் நிகழ்ச்சிகள் இருக்கும்.*

*பிளாட்டூன் ஒன்றுடன் சண்டைக்குப்போன பட்டறிவில்லாமலே, கொம்பனி உதவியாளராகச் செயற்படத்தக்க அறிவாற்றல் கொண்ட துளசியைப் பற்றி எங்களுக்கு இருந்த கற்பனைகள் அதிகம். "துளசியக்கா நல்லதொரு பொறுப்பாளர். இருந்திருந்தால் எவ்வளவோ செய்திருப்பார்" சிறப்புப் படையணியினர் மட்டுமல்ல அவரை அறிந்த எல்லோருமே இதைத்தான் சொல்கின்றார்கள்.* ●

***கேணல் யாழினி, சிறப்புத் தளபதி.***

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் குடாநாட்டிலே 35000 வரையிலான படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். இப்போது போரில் வெற்றிகொள்வது என்றால் என்ன எனப் பார்ப்போம்.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த 'போரியற்கலை' என்ற கோட்பாட்டை உலகிற்கு வழங்கிய சீன இராணுவ மேதையான சன் சூ அவர்களின் கருத்துக்களின் படியும், 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த படைத்துறை மூலோபாய வல்லுனர்களான கார்ல் வொன் குளோஸ்விச் மற்றும் அன்ரோனி கென்றி யோமினி ஆகியோர்களின் கோட்பாடுகளின்படியும் ஒரு போரில் வெற்றி பெறுவது என்பது பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

'ஒரு போரின் அடிப்படை நோக்கமே எதிரியின் இராணுவ வளங்களையும் அவனது போரிடும் ஆற்றலையும் அழிப்பதாகும். போரின் வெற்றி என்பது இதனடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது.'



இராணுவ வளங்கள் என்று நாம் இங்கு குறிப்பிடுவது படையணிகள், வழங்கல் விநியோகங்கள், கவசப்படை, ஆட்டிலறிகள், பீரங்கிகள், மருத்துவ உதவிகள், கடற்படை, வான்பலம், கட்டளைப்பீடம், புலனாய்வு (அணுஆயுதங்கள், விண்வெளி ஆதிக்கம்) போன்றனவற்றையாகும்.

இந்த வகையிலே விடுதலைப்புலிகள் தமது படைபலங்களுக்கு பாரிய சேதங்கள் எதுவும் இல்லாமல் 1995-96 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் இருந்து வன்னிக்கு தமது கட்டுப்பாட்டுத் தளப்பிராந்தியத்தினை மாற்றிக்கொண்டார்களோ அதேபோன்று தற்போதும் தமது படையணிகளை சேதமில்லாமல் தென்தமிழீழத்தில் இருந்து நகர்த்தி விட்டார்கள். எனவே போரியல் கோட்பாட்டு ரீதியாக சிறிலங்கா அரசும் அதன் ஊதுகுழல் ஊடகங்களும் கொண்டாடும் 'கிழக்கு பிராந்தியத்தின் படைத்துறை வெற்றிகள்' என்பன உண்மையான அர்த்தத்தில் வெற்றிகளே அல்ல. அத்துடன் ஒரு தரப்பின் போரிடும் ஆற்றல் அழிக்கப்படாதவரை எதிரிகளின் பிரதேசங்களைக் கைப்பற்றுவதையோ அல்லது நிலைகொள்வதையோ ஒரு போதும் வெற்றியாகப் போரியல் கோட்பாடுகளின் படி கருதுவதில்லை.

ரஸ்யாவிற்கு எதிராக நெப்போலியன் தலைமையிலான பிரெஞ்சுப் படைகளும் இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லரின் நாசிப்படைகளும் பெரும் சமர்களைப் புரிந்து மொஸ்கோ, ஸ்ராலின் கிராட் போன்ற பெரும் நகரங்கள் வரைக்கும் முன்னேறின. ஆனால் இறுதியிலே அகலக்கால்கள் வைத்ததற்கான தகுந்த விலையினை இப்படைகள் செலுத்தவேண்டியிருந்ததோடு மிகப்பெரிய வல்லரசுகளாக விளங்கிய இந்நாடுகள் இறுதியில் படுதோல்வியையும் சந்தித்தன. இதேபோன்றுதான் ஜெயசிக்குறு காலப்பகுதியில் சிங்களப்படைகள் பாரிய படைநடவடிக்கைகளை மேற்கொண்டு வன்னிப்பிராந்தியத்தின் மேற்கே மடுப்பிரதேசம், கிழக்கே ஒட்டுசுட்டான்-நெடுங்கேணி மற்றும் ஏ9 பாதைவழியே மாங்குளம் வரைக்கும் முன்னேறியிருந்தன. பின்னர் எமது தேசியத் தலைவரின் மதிநுட்பம் மிகுந்த துல்லியமான படைத்துறை தந்திரோபாயத் தாக்குதல்கள் காரணமாக சிங்களப்படைகள் ஒரு வருடகாலமாக அங்குலம் அங்குலமாக முன்னேறிய பகுதிகளில் இருந்து ஒருசில நாட்களுக்குள்ளேயே தாக்கி விரட்டியடிக்கப்பட்டார்கள்.

***தென்தமிழீழத்திலே கள நிலைமைகளையும் பூகோள அமைவிடங்களையும் கருத்தில் கொண்டு விடுதலைப்புலிகள் தந்திரோபாய ரீதியல் சில பின்நகர்வு நடவடிக்கைகள் மேற்கொண்டதனை மகிந்த அரசு புலிகளுக்கு எதிராகப் பாரிய வெற்றியினை ஈட்டிவிட்டதாகப் பரப்புரை செய்துவருகின்றது. ஆனால் உண்மையில் சிங்கள அரசு தனது அரசியல் மற்றும் பதவி நலன்களுக்காக சிங்களப் படைகளை அளவுக்கதிகமான நிலப்பிரதேசங்களிலே பரப்புவதன் மூலம் முற்றுமுழுதான அழிவுப்பாதைக்கு தனது படைகளை இட்டுச்செல்கின்றது.***

சிறிலங்கா அரசானது 1983ம் ஆண்டில் இருந்து தனது படைத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை பல மடங்கிற்கு அதிகரித்து வந்துள்ளது. அத்துடன் தனது படைபலங்களையும் பல மடங்காக உயர்த்தியுள்ளது.

அதாவது, 1983ம் ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவீனம் 1.7(170 கோடி ரூபாய்)பில்லியன் ரூபாய்களாகும். இது பின்னர் 2001ம் ஆண்டு 61பில்லியன் ரூபாய்கள் என உயர்ந்தது. இந்த வருடம் பாதுகாப்புச் செலவீனத்திற்காக மகிந்த ராஜபக்ச சகோதரர்கள் ஒதுக்கிய தொகையானது 104பில்லியன் ரூபாய்களாகும். அதாவது இரண்டு தசாப்த காலத்தில் பாதுகாப்புச் செலவீனமானது 100வீதத்தால் அதிகரித்துவிட்டது. இதனைவிட மேலும் 60பில்லியன் ரூபாய்கள் விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு மகிந்த அரசு ஒதுக்கப்போகின்றது.

இவ்வாறு பாதுகாப்புச் செலவீனங்கள் சிறிலங்கா அரசால் தாங்கமுடியாதளவிற்கு வானளாவிற்கு அதிகரித்துக்கொண்டு செல்கின்ற நிலையில் வெளிநாட்டு நன்கொடையாளர்கள் மற்றும் நிதி வழங்கும் பன்னாட்டு நிறுவனங்கள் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பான சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்ததன் காரணமாக சிறிலங்காவிற்கான நிதியுதவி வழங்குவதை முற்றாக நிறுத்தியுள்ளன அல்லது பாரியளவிற்கு குறைத்துள்ளன.

சிறிலங்கா அரசோ அதிகரித்த வாழ்க்கைச்செலவு, பொருளாதார நெருக்கடிகள், பணவீக்கம் எதிர்க்கட்சிகள் போராட்டம் என்று அனைத்து சிக்கல்களையும் எதிர்கொள்வதற்கு போரினையே தெரிவாக வைத்திருக்கின்றது. எனவே துட்டகைமுனுவின் மைந்தர்கள் தொடர்ச்சியாக போரினை அரசியல் மற்றும் சுயநலன்களுக்காக நடத்தவேண்டியிருக்கும். ஆனால் இதில் உள்ள ஆபத்து என்னவென்றால் சிங்களப்படைகள் அளவுக்கதிகமாக அகலக்கால்கள் வைத்து பரப்பப்பட்டு விட்டன. அத்துடன் ஒரு வலிந்த தாக்குதல் நடவடிக்கைகளை பாரியளவிற்கு மேற்கொள்வதற்கு தேவையான படையினரை கண்டுபிடிப்பது மகிந்த அரசிற்கு தற்போது மிகவும் கடினமான காரியமாகத்தான் இருக்கும்.

இந்த நிலையிலே எதிர்காலத்தில் இலங்கைத்தீவிலே இடம்பெறவிருக்கின்ற வலிந்த மற்றும் தற்பாதுகாப்புத் தாக்குதல்கள் மிகவும் தீர்க்கமானதாக இருக்கப்போவதோடு ஜெர்மனியர்கள் ரஸ்யாவில் பாடம் கற்றுக்கொண்டதைப்போன்று, அமெரிக்கர்கள் வியட்நாமில் பாடம் கற்றுக்கொண்டதைப் போன்று சிங்களவர்கள் விரைவில் பாடம் கற்றுக்கொள்வார்கள் என்பது திண்ணம். இப்போது எமது தாயக மக்களும் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளும் எமது தேசிய தலைவரின் பின்னால் அணிதிரண்டு இந்த முக்கிய காலப்பகுதியில் அனைவரும் தம்மாலான அனைத்து பணிகளையும் ஆற்றவேண்டும். இதுவே தமிழீழ தேசத்திற்கான விடிவிற்கு ஒவ்வொரு தமிழர்களும் செய்யும் உயரிய பங்கெடுப்பாக அமையும். ●

**(03ஆம் பக்கத் தொடர்ச்சி)**

நான் கேட்கின்றேன் **இதில் ஒருவரையாவது சிறையில் தள்ள உங்களால் முடியுமா?** 450 பில்லியன் (45ஆயிரம் கோடி) வருமானம் கொண்ட நாட்டில் 150 பில்லியனுக்கு ஊழல் நடக்கின்றது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?" இக் கேள்வியை அவர் ஓய்வு பெற்ற மூத்த காவற்துறையாளர்களுக்கும் சருவதேச அமைப்பொன்றும் ஏற்பாடுசெய்த கூட்டத்தில் கூடியிருந்தோரை நோக்கிமட்டும் எழுப்பவில்லை. சிங்கள மக்களை நோக்கிய கேள்வியிது. சண்டே ரைம்சின் கட்டுரையாளரும் சட்ட அமைப்பொன்றின் உதவி நெறியாளருமான கிஷாலி பின்றோ ஜெயவர்த்தனா மிகத் தெளிவாகவே கூறினார். "சட்டத்தின் ஆட்சி இந்த நாட்டில் குலைந்ததிற்கும் ஊழலுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இது மனித உரிமைத் தராதரம் பேணப்படுவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது." நீதித்துறை ஊழல் பற்றி அவர் பேசுகையில் "இவை வெறுமனே பணத்தோடு மட்டும் தொடர்புபடவில்லை. பல தீர்ப்புக்கள் சட்டத்தின் ஆட்சியைக் கணக்கில் எடுக்காது வெறுமனே அரசியல் காரணங்களுக்காக வளர்க்கப்பட்டிருப்பதை நாம் காணலாம்" இவை எல்லாம் உணர்த்துவதென்ன? அடிமடியில் தீப்பற்றி எரியத்தொடங்குவதையல்லவா?

இவ்வாறாக கழிவிரக்கம் கொண்ட கட்டுரைகளும், கடிதங்களும், தலையங்கங்களும் சிங்களத்தில் இப்போது வெளிவரத்தொடங்குகின்றன. உள் முரண்பாடுகளாலும் அரசியல் சதிகளாலும் சிங்களம் கொதித்த வண்ணமே உள்ளது. வரலாற்றின் சுருக்குச் சிங்கள தேசத்தின் கழுத்தை மேலும் மேலும் இறுக்குகின்றது. இவை பற்றி ஏதும் கவலைப்படாது. மகிந்தர் தனது குடும்ப ஆட்சியைப் புதிதாக நிலைநாட்டத் தேர்ந்தெடுத்த காலம் அகாலம். "ஒரு தவறான சுவரில் சாத்தி வைக்கப்பட்டுள்ள ஏணியில் ஏறுமவர் விரைவில் தனது முடிவைக் காண்பார். ஏனெனில் வரலாற்றின் விதிகளைப் புரியாது பகுத்தறிவற்று, வாழும் சமகாலத்தோடு தொடர்பற்று, ஒரு இறுதிநேர சருவாதிகாரி போல அவர் செயற்படுகின்றார். வரலாற்றில் மிக இக்கட்டான சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ள ஜே.வி.பி மிக தரமான முடிவொன்றை எடுக்கத் தள்ளப்பட்டுள்ளது. பிறர்க்கு வைத்தபொறியில் தானே சிக்கியது தவிக்கின்றது. மக்களின் எதிர்ப்பைப் புரிந்து கூட்டணி அமைத்த ரணில்+ மங்கள கூட்டோ கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த முடியாது உள்முரண்பாடுகளால் அறிக்கைகளை விட்டே ஆட்சியைக் கைப்பற்றும் கனவு காண்கின்றது. பிணங்களில் மொய்க்கும் இலையான்களாக ஜே.எச்.யூ மொய்த் திடப் பறக்கின்றது. சரி தமிழர்கள் தானே கொல்லப்படுகின்றார்கள் நாம் கொல்லுகின்றோம்தானே என சிங்களவர் ஒருவகை மன விகாரத்தில் வாழ்கின்றார்கள். எம் மக்களோ வரலாற்றின் அத்தனை வடுக்களையும் தாங்கி பொழுது விடியும் என காத்திருக்கின்றார்கள். **வரலாற்றின் மிக அற்புதமான தருணம் ஒன்றிற்காக விடுதலை இயக்கம் காத்திருக்கின்றது.**

ஆகவே இனி நடக்கப்போவது என்னவென்பதை அறிய வரலாறே காத்துநிற்கின்றது.

"காலம் காலமாய் இரத்தக்கறை படிந்த,
துருப்பிடித்த இதயத்தைத்
துருவி ஆராயுங்கள்
மஞ்சள் அங்கிகளுக்குள்ளும்
மழித்த தலைகளுக்குள்ளும்
புலப்படாது புதைக்கப்பட்டுவிட்ட
புத்தரின் அன்பு துலங்கும்வரை
செதுக்குங்கள் உங்கள் இதயத்தை
செதுக்குங்ளகள்"

என சு.வி.வரிகள் சொன்னதைத் தவிர வேறு என்ன சொல்ல இயலும். ●



www.eelamview.com


www.eelamview.com





# பணிந்து அறியாத செருக்கு தணிந்து அணையாத நெருப்பு

வழமைக்கு மாறாக
எப்போதும் இல்லாத நெட்டூரமாக
இந்த வருடம் நெருப்பெரிக்கிறது
வெய்யில்.
அடிவற்றிப் போகுமெனும் நம்பிக்கையில்
சுரக்கும் ஊற்றுக் கண்களை
வழிமறிக்கிறது கோடை
கோதபாயாவின் கனவுகளைப்போல.
இது மபார்த்திபன்டு மாதம்
திலீபன் தீக்குளித்த நாட்கள்.
இருபது வருடங்கள் கழிந்த பின்னரும் கூட
பசித்திருந்த வயிற்றின்
வெக்கையடிக்கிறது
பார்த்திருந்த உறவுகளின் நெஞ்சில்.
ஆறாத துயரும்த அணையாத
நெருப்புமாக
மயக்க வெளிகளைக் கடந்து
மாரீசக் கனவுகளைத் துறந்து
இன்றும் நிமிர்ந்துதான் நிற்கிறது நிலம்.
புதிதுடுத்துச் சுழல்கிறது போராட்டப்
புயல்.
வாசல் திறந்துவரும் வசந்தத்துக்காக
நிலம் செழிக்கப் பெய்யும் மழைக்காக
நம்பிக்கையுடன் கிடக்கிறது வயல்.
உள்ளே உரங்கொண்டெழுவதை
அறியாத உலகம்
உறக்கத்தில் கிடப்பதாகவும்
உறைநிலைக்குப் போனதாகவும்
ஏதேதோ எல்லாம் எழுதிக்குவிக்கிறது.
மமஅவர்கள்கதை முடிந்துவிட்டதுடுடு
என
பொச்சடிக்கின்றன சில நச்சுப்பல்லிகள்.
வன்னிக்குள் ஒடுங்கியது வல்லமை" என
கித்துள் கள்ளின் கிறுகிறுப்பில்
உச்சிக் கொம்பில் உட்காந்து கொண்டு
மமகிழட்டுத்தாட்டான்டுடு கிசுகிசுக்கிறது.
சிங்களத்துக்கு முடிதரித்துப் பார்ப்பதில்
சங்கரிக்கு எத்தனை சந்தோஷம்?
குக்குறுப்பான்களே!
குறித்துக்கொள்ளுங்கள்
ஆழக்கடல் அடங்கிக்கிடப்பது
கரைகளை உடைக்கவில்லையேயென
அழுவதற்கல்ல
கோடி அலைகொண்டு குமுறி எழுவதற்கே.
கோடையில் மரங்கள் ஆடை அவிழ்ப்பது
பூக்களைப் பூத்து புதுக்கோலம்
கொள்வதற்கே.
இங்கே ஆறுகள் வற்றிப்போனதாக
எவரும் கணக்கெழுதி வைப்பீரெனில்
நாளை நுங்கும் நுரையுமாகப்
பொங்கும்போது
நீங்கள்தான் நொந்து போவீர்கள்.
இந்த அக்கினி நாட்களைக் கடந்துதான்
அந்த மழைநாட்களை எட்டவேண்டும்.
மரணப்படுக்கையில் திலீபன் சொன்னானே
அந்த மக்கள் புரட்சி கண்திறக்க வேண்டும்.
ஒற்றைப் பொறியிலிருந்தே தீ மூட்டவல்ல
சக்தி படைத்தவர்கள் தமிழர்.
சின்னக்காற்றையே புயலாக்கிச் சீறவல்ல
தன்மைபடைத்தவர்கள் புலிகள்.
பிரபாகரன் கையிலுள்ள சூரியமேடும்
தலையிலுள்ள வீரியகோடும்
பணிந்து அறியாத செருக்கு
தணிந்து அணையாத நெருப்பு.
எத்தனை நெளிவும் சுழிவும் கடந்து...
எத்தனை வதையும் வலியும் சுமந்து...
எத்தனை அழகும் உயிரும் புதைந்து...
தூரம் கடந்த பயணம் இது.
காலிற் களைப்பேறக்கூடாத காலமிது.
புரட்சி என்பதும் போராட்டம் என்பதும்
பூப்பறித்தல் அல்ல.
புல்லாங்குழல் வாசிப்பதும் அல்ல.
அது உயிர்கொடுத்து முன்னேறுவது
விலைகொடுத்து வெற்றிகொள்வது.
சுட்டெரிக்கும் சூரியனில்
தூசிபடிவதில்லை
ஒளிகொண்டோரில் தோல்விகள்
ஒட்டிக்கொள்வதுமில்லை.
இப்போது என்ன நடந்து விட்டது உனக்கு?
ஒற்றை முடியை இழந்தவுடன்
தலையிலென்ன மொட்டையா
விழுந்துவிடும்?
மீண்டும் முளைக்கும் மூடி
கூந்தலை அள்ளிக் கொண்டையே
போடமுடியும்.
பூவொன்று விழுந்தவுடன்
மரமென்ன பொட்டையுமா து?
அழித்துவிடுகிறது?
மீண்டும் பூப்பூப்பது அதன் வரம்
முன்னரிலும் அழகாகும் அந்த மரம்.
தென்தமிழீழம் வெறும் மண்ணல்ல
எங்கள் உயிரில் பிணைந்த உறவு.
எம் தாயின் ஒற்றைமுலை தென்தமிழீழம்
மற்றமுலை வடதமிழீழம்
இரண்டு முலைகளிலும் பாலருந்தும்
பிள்ளைகள் நாம்.
விட்டுவிடலாமா ஒன்றை
அவள்தான் விட்டுவிடுவாளா கன்றை?
வந்தது... போவதற்கென்று நம்பு
தென்தமிழீழம் விட்டுக்கொடுக்கமுடியாத
பங்கு.
நீ கவசம் தரிக்கும் கச்சிதத்தில்
மாவிலாறு மகுடம் தரிக்கும்.
நீ வன்னியில் வில்வளைக்கும்
பேரொலியில்
குடும்பிமலைக் காடு குதுகலிக்கும்.
நாயாற்றைக் கடக்கும் உன் காலடி
அதிர்வில்
சம்பூர் தலைநிமிர்த்திக்கொள்ளும்.
திக்கெட்டும் கேட்கும் உன் சங்கநாதத்தில்
கொக்கட்டிச்சோலை பொங்கியெழும்.
தோல்வி அடக்குமுறையாளர்களுக்கே
அன்றி
விடுதலை வீரர்களுக்கல்ல.
அச்சமும் பேடிமையும் உனக்கில்லை.
சில பொழுதுகளில் விழுவது குற்றமல்ல
விழுந்தபடி கிடப்பதுதான் குற்றம்.
படிகளில் ஏறிப் பயணிப்போம்
முகில்கள் தலைகளை முட்டும்வரை.
காற்றிலேறிக் கைகளை விரிப்போம்
சூரியனைத் தொட்டுவிடும்வரை.
இளமையின் நாளில் எழுவது அழகு
விடுதலை வழியில் வெற்றியே அழகு
தாயிலும் எங்கள் தாயகம் அழகு
சந்ததிக்காகச் சாவதே அழகு.
தொடங்கிய வழி விரிந்து கொள்ளும்
சிலவேளை வளைந்து கொள்ளும்
இடைக்கிடை சுருங்கியும் கொள்ளும்
ஆயினும் தளரக்கூடாது.
வெற்றியே இலக்கெனக் கொண்டால்
விழுவதையிட்டுப் புலம்பக்கூடாது
விரைவில் எழுந்துவிட வேண்டும்.
விடுதலையே மூச்செனக் கொண்டால்
தடைகளைக்கண்டு கலங்கக்கூடாது
வருவது வரட்டுமெனக் கடக்க வேண்டும்.
நெஞ்சில் விடுதலைக் கனலை மூட்டினால்
அச்சப்பேயை அடித்து விரட்டினால்
இனத்தின் மானத்தை எடுத்துத் தரித்தால்
உயிரினைக்கூட ஊதத் துணிந்தால்
தமிழீழம் நிகழமுடியாத அதிசயமல்ல
கனவிலே வரும் காட்சியுமல்ல.
எனவே புறப்படுவோம்
போன பேருந்து மீண்டும் வருகிறது
எம்மைஏற்றிச் செல்வதற்காக.
கட்டினால் கொண்டை
தட்டினால் மொட்டை
எதுவானாலும் எங்கள் தலையிலாகட்டும்.



உலைக்களம்

வியாசன்



www.eelamview.com